OFFICE OF THE REGISTRAR OF BOOKS,
REGISTERED
18 AUG 1910
MADRAS.

सत्यात् नास्ति परो धर्मः

# பூர்ணசந்திரோதயம்.

| | | |
|---|---|---|
| தொகுதி 1. | சாதாரண௵ ஆடி௴ 31௳<br>1910௵ ஆகஸ்டு௴ 15௳ | பகுதி 4. |

## பகவத்கீதையும் கருமயோகமும்.

(80-ம் பக்கத் தொடர்ச்சி.)

அப்படி கர்மம் செய்வதில், லோகத்திலுள்ள ஜனங்களுக்கு நன்மையைக் கொடுக்கத்தக்க கருமங்களைச் செய்யவேண்டும். ஞானத்தை யடைந்த ஜனகர் முதலான ராஜரிஷிகள் அவ்விதமாக கருமம் செய்துகொண்டே ஞானத்தை யடைந்தார்கள்.

𑌕𑌰𑍍𑌮𑌣𑍈𑌵 𑌹𑌿 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌜𑌨𑌕𑌾𑌦𑌯𑌃
𑌲𑍋𑌕𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌮𑌏𑌵𑌾𑌪𑌿 𑌸𑌂𑌪𑌶𑍍𑌯𑌨𑍍 𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿.

ஜனகன் முதலானவர்கள் கர்மத்தினாலேதான் ஞானத்தையடைந்தார்கள். ஜனங்களின் பிரயோஜனத்தையாவது நோக்கி கர்மஞ் செய்வதற்கு யோக்கியனாயிருக்கிறாய். (கீதை iii 20)

3. மேலானவன் அவனுடைய ஸ்தானத்திற்கு ஏற்பட்ட காரியங்களைச் செய்யத் தவறுவானாயின் அவனுடைய நடத்தைகளைத் தங்களுக்கு ஓர் அளவையாகக்கொண்டு, அவனுக்குக்கீழான நிலைமையிலுள்ள ஜனங்கள் அவரவர்களுக்குரிய கடமைகளைச் செய்யாமற் கெட்டுப்போவார்கள். ஆகையினால் மூடர்களுக்கு அவன் விபரீத புத்தியைக் கொடுக்கக் கூடாது. அவர்களுக்கு அவனுடைய நடத்தையை உதாரணமாகக் காட்டவேண்டியது.

𑌯𑌦𑍍𑌯𑌦𑌾𑌚𑌰𑌤𑌿 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌸𑍍𑌤𑌤𑍍𑌤𑌦𑍇𑌵𑍇𑌤𑌰𑍋 𑌜𑌨𑌃
𑌸 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌲𑍋𑌕𑌸𑍍𑌤𑌦𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌤𑍇.
𑌨 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌭𑍇𑌦𑌂 𑌜𑌨𑌯𑍇𑌦𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌸𑌙𑍍𑌗𑌿𑌨𑌾𑌮𑍍
𑌜𑍋𑌷𑌯𑍇𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸𑌮𑌾𑌚𑌰𑌨𑍍.
𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍇𑌰𑍍𑌗𑍁𑌣𑌸𑌂𑌮𑍂𑌢𑌾𑌃 𑌸𑌜𑍍𑌜𑌨𑍍𑌤𑍇 𑌗𑍁𑌣𑌕𑌰𑍍𑌮𑌸𑍁
𑌤𑌾𑌨𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌵𑌿𑌦𑍋 𑌮𑌨𑍍𑌦𑌾𑌨𑍍𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌵𑌿𑌨𑍍𑌨 𑌵𑌿𑌚𑌾𑌲𑌯𑍇𑌤𑍍.

சிரேஷ்டனானவன் எதை எதைச் செய்கிறானோ அதையே இதர மனிதனும் செய்கிறான். அந்த சிரேஷ்டன் எதைப்பிரமாணமாகக்கொள்ளுகிறானோ, அதை உலகத்திலுள்ள ஜனங்களும் அனுசரிக்கிறார்கள். வித்வான் கர்மத்தில் பற்றுள்ள அக்ஞானிகளுக்குப்புத்திபேதத்தை உண்டாக்கக்கூடாது. சரியாக நடந்துகொண்டு சகல கருமத்தையும் செய்விக்கவேண்டியது. (கீதை iii 21. 26. 29.)

பிரகிருதியினுடைய குணங்களால் மூடர்களாயிருக்கிறவர்கள் குணபேதங்களினால் ஏற்பட்ட கர்மங்களில் அபிமானம் வைக்கிறார்கள். ஒன்றும் தெரியாத அந்த அறிவீனர்களைத் தெரிந்தவர்கள் மாறி நடக்கும்படி செய்யக்கூடாது. சிரேஷ்டமான மார்க்கத்தை அனுசரிக்கத் தொடங்கினவன் தன்னைக்காட்டிலும் தாழ்மையான விவேகத்தை யுடையவர்கள் விபரீத வழிகளில் செல்லாதவண்ணம், தன்னுடைய நடத்தையாலும் செய்கையாலும் அவர்களுக்கு நல்ல வழியைக் காண்பிக்கவேண்டியது நியாயமாயிருக்கிறது. ஏனென்றால், நாம் நடந்துகொள்ளவேண்டிய மாதிரியை சுருதிமுகமாகவும் நமக்கு முன்னர் தோன்றும் பல உலகங்களிலுள்ள ஈசுவர சிருஷ்டி மூலமாயும் தெரிந்துகொள்ளலாம். ஈசுவர சிருஷ்டியைக் கவனிக்குங்காலத்தில் எல்லா ஜீவராசிகளும் ஓர் ஓர் கர்மத்தை அவலம்பித்தே நடைபெறுகின்றன. ஈசுவரன் கர்மத்திலேயே எப்போதும் பிரவிர்த்தித்துக்கொண்டிருக்கிறார். அவர் அப்படி பிரவிர்த்திக்காமற்போனால் அவருடைய சிருஷ்டியானது நிலைநிற்காது. அது பிரளய காலத்தை உண்டுபண்ணத் தக்கது. ஆகையால் அடியிற்கண்டவாறு பகவான் அர்ச்சுனனுக்குச் சொல்லுகிறார்.

𑌨𑌮𑍇𑌪𑌾𑌰𑍍𑌥𑌾𑌸𑍍𑌤𑌿𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂𑌤𑍍𑌰𑌿𑌷𑍁𑌲𑍋𑌕𑍇𑌷𑍁𑌕𑌿𑌂𑌚𑌨
𑌨𑌾𑌨𑌵𑌾𑌪𑍍𑌤𑌮𑌵𑌾𑌪𑍍𑌤𑌵𑍍𑌯𑌂𑌵𑌰𑍍𑌤𑌏𑌵𑌚𑌕𑌰𑍍𑌮𑌣𑌿.

ஓ பார்த்தா! எனக்கு மூன்று லோகங்களிலேயும் செய்யவேண்டியது யாதொன்றும் கிடையாது. அடையவேண்டியதாய் அடையப்படாதது யாதொன்றும் கிடையாது. ஆனாலும் கர்மத்தில் பிரவிர்த்தித்திருக்கிறேன்.

𑌯𑌦𑌿𑌹𑍍𑌯𑌹𑌂𑌨𑌵𑌰𑍍𑌤𑍇𑌯𑌂𑌜𑌾𑌤𑍁𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌤𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌤𑌃
𑌮𑌮𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥𑌸𑌰𑍍𑌵𑌶𑌃.

ஓ பார்த்தா! நான் ஒருகாலத்திலாவதுஜாக்கிருதையாய் கருமஞ் செய்வதில் பிரவிர்த்திக்காமற் போனேனேயாகில் மனிதர்கள் என்னுடைய மார்க்கத்தையே அதாவது கர்மம் செய்யாமையையே முழுவதிலும் அனுசரிப்பார்கள்.

𑌉𑌤𑍍𑌸𑍀𑌦𑍇𑌯𑍁𑌰𑌿𑌮𑍇𑌲𑍋𑌕𑌾𑌨𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮𑌚𑍇𑌦𑌹𑌮𑍍
𑌸𑌙𑍍𑌕𑌰𑌸𑍍𑌯𑌚𑌕𑌰𑍍𑌤𑌾𑌸𑍍𑌯𑌾𑌮𑍁𑌪𑌹𑌨𑍍𑌯𑌾𑌮𑌿 𑌮𑌾𑌃𑌪𑍍𑌰𑌜𑌾𑌃.

நான் கர்மத்தைச் செய்யாமற்போனால் இந்த லோகத்திலுள்ளவர்கள் கெட்டுப்போவார்கள். குழப்பத்திற்குக் காரணமாவேன். இந்த ஜனங்களைக் கொன்றவனாவேன். (கீதை iii 22, 23, 24.)

ஆகையால் தெரிந்தவன் ஜனங்களுடைய நன்மையை உத்தேசித்துப் பற்றுதலில்லாமல் அவனுக்குரிய கர்மத்தைச் செய்யவேண்டியது.

𑌸𑌕𑍍𑌤𑌾𑌃𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌸𑍋𑌯𑌥𑌾𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿𑌭𑌾𑌰𑌤
𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑌥𑌾𑌸𑌕𑍍𑌤𑌶𑍍𑌚𑌿𑌕𑍀𑌰𑍍𑌷𑍁𑌰𑍍𑌲𑍋𑌕𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌮𑍍

ஓ பார்த்தா! தெரியாதவன் கருமத்தில் பற்றுதலோடு எப்படி கர்மத்தைச் செய்கிறானோ அதுபோல், தெரிந்தவன் பற்றுதலில்லாமல் ஜனங்களுடைய நன்மையை இச்சித்தவனாய்க் கர்மத்தைச் செய்யவேண்டியது. (கீதை iii 25)

4. வித்வானுக்கும் மூடனுக்கும் என்ன வித்யாசமென்றால், கர்மத்தை இருவர்களும் செய்தபோதிலும், வித்வான் பிறருடைய

பிரயோஜனத்தை உத்தேசித்து கருமத்தைச் செய்கிறான். மூடன் தன் சொந்த லாபத்தை உத்தேசித்து அந்தக் கர்மத்தைச் செய்கிறான். இருவர்களுள் ஏற்பட்ட வித்யாசமானது கருமத்தைச் செய்யும் உட்கருத்தினுள் ஏற்பட்ட வித்தியாசமே தவிர வேறில்லை. இதே மாதிரியாக மார்க்க விளக்கம் (Light on the Path) என்னும் கிரந்தத்தில் "Kill out ambition but work as those work who are ambitious" இதன் பொருள் "பேராசையைத் தவிர், ஆனால்ஆசை கொண்டார் எவ்விதம் நடைபெறுவாரோ அவ்விதம் நட." ஆனால் கருமத்தில் பிரவிர்த்தியானது இருவர்களுக்கும் பொதுவான குணமாம். ஆகையால் ஞானியும் அஞ்ஞானியும் அவரவர்களுடைய பிரகிருதிக்குத்தக்கபடி கருமத்தைச் செய்கிறவர்களாகிறார்கள்.

> ஸத்ருஶம்சேஷ்டதேஸ்வஸ்யா:ப்ரக்ருதேர்ஜ்ஞாநவாநபி
> ப்ரக்ருதிம்யாந்திபூதாநி நிக்ரஹ: கிம்கரிஷ்யதி.

ஞானியும்கூட தன்னுடைய பிரகிருதிக்கொத்ததாய கர்மத்தில் பிரவிர்த்திக்கிறான். பிராணிகள் அவரவர்கள் பிரகிருதியை அடைகிறார்கள். ஆகையால் கர்மத்தில் பிரவிர்த்திப்பதை தடுத்தலானது என்ன பிரயோஜனத்தைச் செய்யக்கூடியது. (கீதை iii 33)

5. கர்மம் என்பது யாதெனில், அது ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு தேசத்திலும் மாறுபாடு அடையக்கூடியது. அதை சுருதியில் குறிப்பிட்டுச்சொல்லப்பட்ட கருமத்தை மட்டும் வற்புறுத்திச் சொன்னதாகக் கொள்ளுதல் சரியன்று. மேலும் கீதையானது எக்காலத்துக்கும் பொதுவான தர்மத்தை உபதேசிக்கிறது. ஒருகாலத்திலாவதுஒருதேசத்திலாவது, தடாகம் ஏற்படுத்துவதும்,கிணறு வெட்டுவதும், யாகம் செய்வதும், உலகத்தின் க்ஷேமத்தின்பொருட்டு பலாபேக்ஷயின்றி செய்தல் உசிதமாம். ஜலம் நிரம்பியிருக்கப்பட்ட இடத்தில் தடாகம் ஏற்படுத்துவதும், கிணறு, வெட்டுவதும் அநுசிதமாம். ஒவ்வொரு காலத்திலும் உலகத்தினுடைய நாகரீகங்களின் வித்தியாசங்களினால், உலகத்திற்கு அந்தந்தக்காலங்களில் பிரயோஜனத்தைத்தரும் கருமங்கள் வித்தியாசப்படுகின்றன. உலகத்தின்கண் பலதேசத்தவர்கள் சமாதானமாகி யுத்த

ம் செய்வது அஸம்பாவிதமாக ஏற்படும் காலம் நிகழத்தக்கது. அந்தக் காலத்தில் க்ஷத்திரிய தர்மத்தைக்கைக்கொண்டு யுத்தம்செய் என்று பகவான் அர்ச்சுனனுக்கு அளித்த புத்திமதியை நேரே கைக்கொள்ளுதல் அசாத்தியமாகும். அதர்மமுமாகும். ஆனால் அந்த புத்திமதியின் தாத்பரியமானது யுத்தத்தைத்தவிர இதர பிரவிர்த்திகளில் உபயோக முள்ளதாயிருக்கும்.

6. சுயநயம் பாராட்டாது நிகழ்கின்ற யஞ்ஞரூபமான கர்மமானது பல ரூபங்களை உடையது.

𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌯𑌜𑍍𑌞𑌾𑌸𑍍𑌤𑌪𑍋𑌯𑌜𑍍𑌞𑌾 𑌯𑍋𑌗𑌯𑌜𑍍𑌞𑌾𑌸𑍍𑌤𑌥𑌾𑌽𑌪𑌰𑍇 ।
𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑌜𑍍𑌞𑌾𑌶𑍍𑌚 𑌯𑌤𑌯𑌸𑍍𑌸𑌂𑌶𑌿𑌤𑌵𑍍𑌰𑌤𑌾𑌃 ॥

சிலர் திரவியதானத்தை யஞ்ஞமாகவும், சிலர் தபஸை யஞ்ஞமாகவும், சிலர்யோகத்தையஞ்ஞமாகவும், அப்படியேசிலர் வேதசாஸ்திரபாராயணம் அர்த்த விசாரம் இவைகளைச் செய்வதை யஞ்ஞமாகவும் திடமான விரதமுடையவர்களாக முயற்சிக்கிறார்கள். (கீதை 4. 28).

ஆகையால் யஞ்ஞங்களுடைய மாறுபாடுகள் அநேகவிதங்களாயிருக்கின்றன.

𑌏𑌵𑌂 𑌬𑌹𑍁𑌵𑌿𑌧𑌾 𑌯𑌜𑍍𑌞𑌾 𑌵𑌿𑌤𑌤𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌮𑍁𑌖𑍇 ।
𑌕𑌰𑍍𑌮𑌜𑌾𑌨𑍍𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌤𑌾𑌨𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍇𑌵𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑍇 ॥

இவ்விதமாய் அநேகவிதமாய் யஞ்ஞங்கள் வேதத்தில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் எல்லாவற்றையும் கர்மத்திலிருந்து உற்பத்தியானவைகளாக அறி. இவ்விதம் அறிந்துகொண்டு கர்மபந்தத்தினின்றும் விடுபடுவாய். (கீதை iv. 32.)

(இன்னும் வரும்)

அ. ரங்கஸ்வாமி ஐயர்.

# அவதாரங்களின், முக்கியமாய்ப் பரசுராம அவதாரத்தின், உண்மை.

[88-ம் பக்கத்தொடர்ச்சி.]

6. இந்த பத்தவதாரங்களும் இந்த வைவஸ்வத மந்வந்தர அபிவிருத்திக்கு ஏற்பட்டவையாக வைத்துக்கொள்வது நலம். ஆதி கூர்மம், ஆதிவராகம், முதலிய ஆதிமன்வந்தர சம்பந்தமான அவதாரங்களுக்கும், பிரகிருதகூர்ம வராகஅவதாரங்களுக்கும், பொதுவாய்ச் சம்பந்தமிருந்தபோதினும், அவைகளை இவைகளுடன் கலந்தால் மனக்குழப்பம் விளையும்.

7. ஒவ்வொரு அவதாரத்திற்கும் மூன்று முக்கிய பிரயோஜனங்கள் உண்டு.

(1) பகவானுடைய உலக விகாசமுறை (evolution) என்னும் தர்மசக்கரச் சுழற்சிக்கு விரோதிகளானவர்களுடைய விநாசம் அல்லது நிக்கிரகம் செய்தல்.

(2) அந்த தர்மத்துக்கு அநுசரணையாய் நடைபெறும் சாதுக்களைக் காத்தல்.

(3) சாதுக்களில் சிரேஷ்டபக்தர்களுக்கு உபதேசம்செய்து அவர்கள் மூலம் பரமசாசுவததர்மமாகிய பாகவத தர்மத்தை உலகத்திற் பரவச்செய்து ஸ்தாபித்தல் என்பனவாம்.

8. முதல்அவதாரமான ஸ்ரீ மத்ஸ்யாவதாரத்தால், இந்த மன்வந்தரத்தின் ஆதியில் ஸ்தூலபூமியுடையவும், ஜீவராசிகளின் ஸ்தூலதேகங்களுடையவும், அபிவிர்த்தி தருமத்துக்கு விக்கிநங்கள் செய்துவந்த அசுரர்களை நிக்கிரகித்து, அந்த தர்மத்துக்கு அநுசரணையாயிருந்த வைவஸ்வதமனு சப்தரிஷிகளைக்காத்து, அந்த பக்தர்களுக்கு மத்ஸியபுராணம் மூலமாய் தர்மோபதேசமருளப்பட்டது.

9. ஸ்ரீ கூர்மாவதாரமோ, ஸ்தூலஆகாசம் ஸ்தூலசரீரங்கள் ஸ்தூலபிராணன் ஞானகர்மேந்திரியங்கள் இவைகளின் அபிவிர்த்திக்

குரிய காரியங்களைச்செய்த அவதாரம். மேற்சொன்ன மூன்று விதங்களான (1) தர்மவைரிநிக்ரகம் (2) தர்மபந்து ரக்ஷணம் (3) தர்மஸ்தாபனம், இவைகளை இந்த அவதார சரித்திரத்திலும் காணலாம். கூர்மத்தின்முடிவான அர்த்தம் சர்வாதாரங்களுக்கும் ஆதாரமான முக்கிய பிராணதத்துவமாகும். இவ்வவதாரத்தில் வியஷ்டியில், பஞ்சபிராணன், பஞ்சஞானகர்மேந்திரியங்கள், இவைகளின் விகாசம் ஏற்படுகின்றது.

10. வராகாவதாரத்தின் பிரயோஜனமென்னவென்றால் காமபூமி காமசரீரங்களின் சுத்தியும் அபிவிருத்தியுமே. துஷ்டஞானேந்திரியங்களான ஹிரண்யாக்ஷன் அல்லது ஹிரண்யேந்திரனுடைய வதத்தைஇந்த அவதாரத்தால் பகவான் செய்தார். விநாசம் சம்ஹாரம் நிக்ரகம் என்னும் பதங்களுக்கு அடியோடு இல்லாமற் செய்துவிடுவதென்பது பொருளல்ல. கர்மத்தின் சாரத்தையும், பலத்தையும், பிரயோஜனத்தையும், ஹரணம்செய்து அதாவது நன்றாய் கிரகித்து, சுத்தப்படுத்தியும், ஊர்ஜிதப்படுத்தியும், மேலான பொருளுக்கு யக்ஞ்யம்செய்தும், அதாவது ஆகாரமாய்க் கொடுத்தும், உயர் நலம்உள்ள சுபாவத்தை அபிவிருத்திசெய்வதே, சரியானவிநாசகர்மமும் ஸ்ரீருத்திரமூர்த்தியின் தர்மமுமாகும். இந்திரியங்களை நிக்ரஹம் பண்ணினபிறகு, பரிசுத்த இந்திரியங்களால் நடத்தப்படும் கர்மங்களே யக்ஞகர்மங்களாகும். அதினால்இந்த வராகாவதாரத்துக்கு, ஸ்வேத யக்ஞவராகமென்று பெயர் வந்தது. இதின் ரோமங்களும் அவயவங்கள் முதலானவையுமே தர்ப்பை சுருக் ச்ருவம் மந்திரம் முதலிய சாதனங்களாயின.

11. நரஸிம்ஹாவதாரத்தால், காமமாநசிகலோகம், காமமாநசிக சரீரம், முதலியவைகளுக்கு அநுக்கிரம் ஏற்பட்டது. காமமானதுசுத்தப்பட்டு விஷயங்களிலிருந்தும் திரும்பி பகவானுடைய பாத பத்ம மகரந்த ரசத்தில் ருசியோடு பற்றுமாகில், அந்த காமமநமே பரம பக்தியுக்தமநமாய் மாறும். காமமநத்தின் காமமே புத்திமநத்தின் ஆகாரமாய் பக்தியாய் முடியும். முன் சிற்றின்பப் பற்று பின்பு பேரின்பஅன்பாகமாறுகிறது.ஹிரண்யகசிபுஅல்லதுஹிரண்யாசயமாகியகாமமநத்தின் சம்ஹாரமும், அதனுடையபலவீரிய ரத்தத்தைப்பாநம்

செய்தலும், நரசிங்கத்தினுலேயே யாகும். ஸிம்மத்தின்ஹாசகர்ச்ச ணைக்கன்றி அந்தமதயானையடங்குமோ? மதயானையென்பதுகாமமநசு. மனத்தையடக்க எவ்வளவு சிம்ஹோபமான தைரிய வீரிய நிர்ப்பய பராக்கிரமும், புத்தி யுக்தஞானமு ம்வேண்டும்? காமமனத்தின் நிஜஸ்வபாவமும், புத்திர பிரேமாஹலாதமாகிய பிரஹ்லாதரக்ஷணையும், அந்த பக்த சிரோமணியின் மூலமாக, பக்தி தர்ம உபதேசமும்இந்த அவதாரத்தால் உண்டாயின.

12. தேவர்களுள் ஜனித்த ஐந்தாவதான வாமனுவதாரமோ, அச்சுத்தமநத்திற்கும், அதை அபிவிருத்திசெய்துகொண்டுவரவேண்டிய உலகின் கண்ணுள்ள (5th race) ஐந்தாம் ஜாதியார்க்கும், அதற்குரிய பிரஞ்ஞாபூமிகளான கரணகளேபரங்களுக்கும் அனுக்கிரகித்தஅவதாரம். அச்சுத்த மனத்தை அனுக்கிரகம் செய்வதற்கும் மமகாரமென்னும் மகாபலமான வாசனையாகிய மகாபலியை வசப்படுத்தல் வேண்டும். லோகோபகாரங்களை அந்த மமகாரம் என்னும் வாசனைபற்றி செய்யாமல், தங்களுடைமை யெல்லாம் பகவான் அளித்த பிச்சையென்றும், ருக்வேதத்தில் சொல்லியபடி, எல்லாதேவதாநாமங்கள்கூட பகவந்நாமமே என்று, வேலைக்காரரான குமாஸ்தாக்களைப்போல் ஜனங்களாகிய கூலிக்காரர்களுக்கு மழை வெயில்தாங்யம் முதலிய கூலிகளை அளிக்கும் தேவர்களுக்கு அனுக்கிரகம்செய்த அவதாரம். இந்தமகாபலியே, பாதாளத்தில், தன் முன்னிற்கும் பகவத் தியானத்தால் மமகாரம் முற்றிலும் ஒழிந்தவுடன், இனி அடுத்துவரும்மந்வந்தரத்தில், மகேந்திரபட்டம் வகிக்கும் ஜீவந்முக்தாதிகாரி புருஷராகஆவார். லோகங்களுக்கு சர்வகாமங்களையும் வருஷிப்பார். மாநசீகசுவரூபமே, அங்குஷ்டமாத்திரபுருஷனுய் ஹிருதயத்திலிருந்து சர்வலோகங்களையும் வியாபிக்கும் திருவிக்கிரமசக்தியை அடைந்தது. இந்தவாமனுவதாரம் ஐந்தாவதென்று சொன்னேம். ஆருவதாகிய ஜாமதக்கினிரிஷியின் சரித்திரசுருக்கம் நான் முன்சொன்னபடி முடிவில் சொல்லுவேன். ஏழாவதாகிய ஸ்ரீதசரத ராமர் மேல் மநசாகிய விஞ்ஞானத்தினுல் பத்து இந்திரியங்களிடம்இருக்கும் அகங்கார வாசனையை பிரிதிகரிக்கும் பத்துத்தலை இராவணனை சம்ஹரித்து, சுத்தவைராக்கியம் மேல் மனத்தின் தர்மமாகி, (அகங்கார மேல்மனத்தின் பின்னவன்)

REGISTERED 8 AUG 1910 OFFICE OF THE REGISTRAR OF BOOKS, MADRAS.

அனுஜனாகிய பிரசித்தமான விபீஷணனையும், வித்தியாசத்தியான ஜாநகிபிராட்டியையும் அனுக்கிரகித்தார். பிரம்மதேவரே, உன்னுடையமனது தர்மத்தைவிட்டு ஒருநாளும் விலகாதென்று, விபீஷணனுக்கு வாக்கருளினார்; அந்தப்புகழையும் அனேக ஆயிரம் வருஷம் அடைந்தார். தனக்கு இராஜ்ஜியம் வேண்டியதின்பொருட்டு தமையனுக்கு துரோகம் செய்து, தமையனையும் கொல்வித்தார் என்ற லோக அபவாதத்திற்கும் பயப்படாமல், பகவத் கைங்கர்யம்செய்ய விபீஷணரைத்தவிர வேறுயாரால் முடியும். லோகாபவாதம் பெரிதோ, பகவத்கைங்கர்யம் பெரிதோ, என்ற இவ்விரண்டுசங்கைகளில்பின்னதேபெரிதென அறிந்து, அனுஷ்டித்த மகாநுபாவன் இவ் விபீஷணர் அன்றோ?.

14. எட்டாவதான ஸ்ரீகிருஷ்ணாவதாரமோ,சர்வாவதாரசெய்கைகளின் சாரபாகங்களைச் செய்துமுடித்து, அகங்கார மமகாரங்களின்வேறாகிய அவித்தியாபந்தத்தையே அறுத்தெறிந்தஅவதாரம். நிர்வாணமான சத்தியலோகம்வரையில் எட்டின ஞானயோகிகளும், இந்த அவித்தை நீங்காமல் ஔபசாரிகமோக்ஷமான கைவல்லிய பதத்தை விரும்பி, லோகோபகாரம் செய்வதை விட்டு கல்பகாலமோக்ஷத்திலிருந்துவிட்டு, திரும்புகிறார்கள். இந்த அவித்தியாவாசனையால் சிலர் யஞ்ஞ ஞான தபஸ்என்றகர்மங்களைக்கூட செய்யக்கூடாதென்றும், ஈசுவரன் லோகோபகாரமாய் செய்யும் கருமங்களுக்கனுசரணையான கருமங்கள் கூட மோக்ஷசந்நியாச பதவிக்கு விரோதமென்றும், அப்படி செய்யாமலிருப்பவர்கள், ஈசுவரனுக்கும் மேற்பதவிக்காரர்களென்றும் சொல்லுவார்கள். [இன்னும் வரும்]

தி. சதாசிவ ஐயர்.

---

## நன்மொழி.

14. அன்பும் ஆதரவுமுள்ள சங்கற்பம் பிரஞ்ஞாபூமியில் நலம் தரும் சக்தியாகத்தங்கும். அவ்விதமே, அதற்கு எதிர்மறையான சங்கற்பம் பிரஞ்ஞாபூமியில் தீமையை உண்டுபண்ணும் சக்தியாகத் தங்கும். அதனால், சங்கற்பம் கொள்ளுதலில் கவனமாக இரு. சங்கற்பமே புண்ணிய பாபங்களின் வித்து.

## சங்கீதம்—அதன் உயர்வும் தாழ்வும்.

(85-ம் பக்கத் தொடர்ச்சி)

(Emotional) போக்யமான சங்கீதத்தை மலருக்கு ஒப்பாக உரைப்பதற்குச் சான்ருக ஸ்ரீமத். சங்கராச்சாரியார் சங்கீதமாதிரிகையாகிய லளிதையை ஸ்துதிக்கும் பொழுது,

"ஶாத꞉ஸ்வரா-ஆதிநிஶம்ஸம் மங்களம் ஶீதலம் ஸௌரபம் தே"

என்று மங்களத்தைப் பயக்கும் சங்கீதத்தின் வாசனை நிறைந்த உன் உருவமெனப்புகன்றிருக்கின்றனர். அறம் வழுவாமலும், போகமாகிய மலரைப் பிரதானமாகக் கொள்ளாமலும், வீட்டுப்பேருகிய கனியையே இலக்ஷியமாகக்கருதி அனுபவிப்போர்க்கு

"யே வீணாயாம் காயந்தி த்வைவ காயந்தி தஸ்மாத்தே ஸநய꞉"

இதன்பொருள் எவர்கள் வீணையில் கானம் செய்கிருர்களோ, அவர்கள் அந்தப் பரம்பொருளையே கானம் செய்கிருர்கள். ஆதலால் அவர்கள்எல்லாச்சம்பத்துகளையும்உடையவர்கள்என மொழியப்படுவதால் அவர்கள் மிக்க புனிதர்களாகி வீட்டுப்பேற்றையடைவாரென்பது திண்ணம். கற்பகத்தின் நிழலையடைந்தும், காஞ்சிரங்காயை விரும்புவதுபோல, சங்கீதத்தின் முக்கிய பலனுகிய ஆத்ம க்ஷேமத்தை விரும்பாமல், சங்கீதத்தை விஷய சுகமாக மட்டும் பாராட்டி, அழிவோர் மகாபாதகர்களெனக் கருதி வேதமானது

காயதஶ்ச த்வஸ்ய ந தேயம் காயதஶ்ச த்த தஸ்ய ந ப்ரதி க்ராஹ்யாணி ॥

என்று, பாடுகிறவனுக்கும், குடிக்கிறவனுக்கும், ஒன்றும் தானம் செய்யக்கூடாது எனவும், பாடுகிறவனிடமிருந்தும் குடிக்கிறவனிடமிருந்தும் யாதொருதானமும் பெறக்கூடாதென்றும் விதித்திருக்கின்றது. இதன்கருத்தை நன்குஅறியாமல், சங்கீதத்தை வெறுத்து, பாடகர்களுக்கு ஒன்றுமளியாத கிருபணர்கள் தங்கள் கொள்கைக்கு அநுகூலமாக இந்த வேத வசனத்தைப் பொருள்படுத்திக்கொள்கிருர்கள். அறம் வழுவி போகத்தையே பிரதானமாகக்கொண்டு எப்பொழுதும் பாடுவதையே விருத்தியாக ஆசரிப்போரும், குடியின் பழக்கத்தினல் வேறு எத்தொழிலையும் புரியாது, மேன்மேலாகக் குடித்துக்குடித்துத்தம்மை மறந்துநிற்போரும்,வருணுசிரமதர்மங்களை

அகற்றினவரெனக்கருதி, அன்னவரை வேதமானது நிந்திக்கிறதேய ல்லாது, வர்ணாசிரம தர்மம் வழுவாமல், ஆக்கிய அமுதைப் பரமேசுவரனுக்கு நிவேதனஞ்செய்து, பிறருடன் உண்ணுவதுபோல், தாம் பயின்ற சங்கீதத்தைக் கொண்டு பரமேசுவரனைத் துதித்து, அதில் எழும் ஆநந்தத்தைத் தாமும் பருகி, பிறரும் பருகப்புரியும் பாகவதர்களை, வேதமானது நிந்திக்கவில்லை; தலைமேல் வைத்துக்கொண்டாடுகின்றது. ஆதலாற்றான் நாதத்தின் இயல்பால் எவ்வித சங்கீதத்திற்கும் பரமேசுவரனே விஷயமாகவிருக்கின்றதையும், எந்தக்கருத்துடன் எம்முறை பாடினும், அப்பாட்டில் அமையும் நாதத்தின் அமைப்பினல் ஈசுவரப்பிரீதி உண்டாகுவதையும், காரணங்களாகக் கொண்டு, பாடகர்களையும் சாமான்யமாக பாகவதர்களாக, நம் நாட்டினர் அழைப்பதைக் காணலாம்.

அவ்வித மேம்பாட்டையுடைய கானவித்தையானது இக்காலத்தில் விஷய சம்பந்தத்திற் கிடந்து உழல்வோர்களால் பயிலப்பட்டு, அறம் வழுவி நிற்கும் சில அதர்மர்களிடத்தில், அது ஒருவிருத்தியாக அமைந்திருப்பதைக்கண்டு, சிலர்சங்கீதத்தை இகழ்வதையும், சிலர் அதை சன்மார்க்கமற்ற விடர்களின் ஆசரணைக்குரியதென்று தள்ளிவிடுவதையும், நாம் காணுகின்றோம். சங்கீதமானது தானிருக்கும் ஒவ்வொரு இடத்தையும் தன்னுடன் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு பொருளையும் மிக்க அழகு செய்விக்கும் பான்மையுடைத்தானதாகையால், பிறப்பினுலும் நடத்தையினுலும், அழகற்ற வகுப்பினர் சிலர் சங்கீதத்தை ஆச்ரயித்து தங்களுக்கு அழகை அமைத்துக்கொள்ள விரும்பி, விசேஷமாகச்சங்கீதத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள். ஆனல் பாண்டத்தின் குணக்கேட்டினுல், அதில் வைக்கப்படும் பால் முதலிய உயர்ந்த பதார்த்தமும் குணக்கேட்டையடைவதுபோல, அதர்ம விருத்தியை உடையவர்களிடம் அமர்ந்திருக்கும் சங்கீதமானது, உத்தேசப்படி அதனுடைய மேலான பலனைப் பயக்காமல், அறிவற்ற மானிடர்களுடைய கேட்டுக்கே காரணமாகின்றது. விடமார்க்கத்தில் அழிந்து நிற்போரும் பொதுமங்கையரும் கைக்கொள்ள, அன்னவர் கைக்குள் விழுந்து வருந்தித் தவிக்கும் கான வித்தையை, அறம்பேணி நடக்கும் ஆண்மக்களும் குலமாதர்களும் கைக்கொண்டு சாஸ்திர முறைப்படி பயிற்சி செய்வாரெனில், பொன்மலர் மணம் பெறும் மேன்மையொக்க அன்

னவர் இகத்திலும் சுகம்குன்றாது வாழ்வுற்று, பரகதியையும் உள்ளங்கைக் கனிபோல அடைவாரென்பதில் ஐயமில்லை.

யோகத்தினால் ஈசுவர சாக்ஷாத்காரத்தை அடைதலாகிய முக்கிய பலனை நாடாது, அதின் அவாந்தர பலன்களாகிய இரஸவாதம், ஆகாசகமனம், பரகாயப்பிரவேசம், பிணியகற்றல், அனுக்கிரஹநிக்கிரஹம் முதலிய விசித்திர லீலைகளில் விழுந்து யோகத்தின் மேலான நிலைபுகலத்திறமின்றி, அழிந்துவிடும் யோக பிருஷ்டர்களைப்போல, சங்கீதத்தை சாதனமாகக்கொண்டு அதின் முக்கிய பலனாகிய பரமாநந்தத்தை அடையத்திறமும், வைராக்கியம் முதலிய மன ஊக்கமும் இல்லாது, இடைவழியில் காமிகளாய் அமைந்து சிலர் கேடுறினும், அதினால் கானவித்தைக்கே குறைவு நேரிட்டதென யாம் கருதுவது குற்றமாகும். ஏனெனில் பேரானந்த மூர்த்தியாகிய பரமேசுவரன்

"ஸரிகமபதநிரதாம் தாம் வீணாஸங்க்ராந்தகாந்தஹஸ்தாம் தாம்
சாந்தாம் ம்ருதுலஸ்வாந்தாம் குசபரதாந்தாம் நமாமி சிவகாந்தாம்'

எனப்புகழப்பெற்ற சங்கீத மாதிரிகையாகிய பரமேசுவரியை சாக்ஷியாக வைத்து, கானத்துடன் ஆனந்த நடனத்தைச்செய்து, பக்தகோடிகளுக்கு அனுக்கிரஹித்து வருகின்றதையும், குன்றிப்போன தருமத்தை நிலைநிறுத்தவென இராமனாக அவதரித்த பரம புருஷனும், தன்னுடைய கல்யாண குணங்கள் அனைத்தும் உலகத்தின்கண் சாசுவதமாக யாவராலும் புகழ்ப்படவேண்டுமென்கிற கருத்துடன், தன்னுடைய திவ்ய சரித்திரமாகிய ராமாயணத்தை கானம் செய்ய இரண்டு பாகவத ரத்தினங்களை தன் புதல்வர்களாக அளித்ததையும், ஸ்ரீகிருஷ்ணனாக அவதரித்த மாதவனும் முரளி *என்னும் வாத்திய விசேஷத்தைக்கைக்கொண்டு அதனுடைய திவ்ய நாதத்தினால் ஆண் பெண் பசு முதலிய சகல பிராணிகளையும் தன்னுளாக்கிக்கொண்டு அவர்களுக்குப் பரமாநந்தத்தைப் புகட்டியருளியதையும், பிரபஞ்ச சிருஷ்டியே நாதத்தின் வியாகரணத்தால் அமைந்ததெனப் பொருள்படுமாறு, சிருஷ்டி கர்த்தாவின் பராசத்தியாகிய வாணியும் எப்பொழுதும் வீணாகானத்தைச்செய்துகொண்டு விளங்குவதையும், பாகவதர்களின்சிரோபூஷணமாக விளங்கும் நாரதர் வீணாகானத்தைச்

* பெரியாழ்வார் திருமொழி - "நாவலம் - பதிகம் பார்க்க.

செய்துகொண்டு அங்குமிங்கும் உலாவி ஈசுவர குணத்தை ஆன்ம கோடிகளுக்குப்போதித்து வருகின்றதையும், நம் நாட்டில் ஆதி காலம் முதல் பாகவதர்களும் திருக்கூட்டத்தார்களும் கானத்துடன் ஈசுவர குணத்தைப்புகழ்ந்து புனிதர்களாய் மேம்பாடு உறுவதையும், வேதமே கான ரூபமாக அமைந்திருப்பதையும், நாம் நன்கு ஆராய்வதைக்காட்டிலும், கானத்தின் சிறப்பை நிலைநாட்டுவதற்கு வேறு காரணங்கள் வேண்டுமோ? கானத்தினுடைய முக்கிய பலனையடைந்து ஈசுவரனுடைய கருணையைப் பெற்றவர்கள், தேவர்கள் என்றும் கானத்தினுடைய கந்தம் மட்டும் அதாவது கானத்தை போக்யமாக மட்டும் கொண்டு காமுகர்களாய் போகத்திலேயே அழிந்து நிற்பவர் கந்தர்வர்கள் என்றும், நமது புராணங்களின் கொள்கை. ஆகவே ஈசுவரனை வழிபாடு செய்வதற்கு ஏற்பட்ட கானமுறைக்கு தேவகானம் என்றும், போகத்திற்காக மட்டும் ஆசரிக்கப்படும் கானம் கந்தர்வ கானம், என்றும் பகுத்துப் பேசப்படும். ஆகவே, முன்செய்த நற்கருமத்தின் மிகுதியால் பாடுவதற்கினிய குரலும் பாட்டினைச்செவியுற்று மகிழ்வதற்குரிய காதும் பெற்றவர்கள் தாம்பாடுவதும் கேட்பதுமாகிய கானம் முழுவதும் தேவகானமாய் அமையும்படி பழகுவது ஆன்மாவின் க்ஷேமத்திற்கு இன்றியமையாததாகும்.

(இன்னும் வரும்)

பி. எஸ். சுப்பிரமணிய ஐயர்.

## நன்மொழி

15. "எவர் எவர் எப்படி நினைப்பரோ, அவர் அவர் அப்படி ஆவார்". இது உபநிஷத்தின் முடிவு.

16. உயர் நலம் அமைந்த பாவம், உலகத்தை தாங்கும், ஆதரிக்கும்.

17. நடுநிலைமை வழுவாத சத்தியம் உலக சமூகத்தில் நேர்மையையும் அந்நியோந்நியத்தையும் உண்டாக்கும். அதனால் ஐக்கியமும் ஜனக்கட்டும் உண்டாகும். அசத்தியமோ, குரோதத்தையும் அதனால் பகைமையும் உண்டாக்கும்; அதனால்ஐக்கியம் தொலையும் ஜனக்கட்டு பொய்த்துப் போம்.

# வைதிகசைவம்.

நம்தேசத்தில் வைதிகசைவம் ஆகமசைவம் என இருவகையாக, சைவசமயம் நடைபெறுகின்றது. முன்னது, வேதம் உபநிஷத்துக்கள் வேதாந்த சூத்திரம்முதலியவைகளை முக்கியமான ஆதாரமாகக்கொண்டிருக்கின்றது. பின்னது, ஆகமங்களை முக்கியமான ஆதாரமாகக் கொண்டிருக்கின்றது. இப்போது வைதிக சைவத்தைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்லுவோம்:—

மக்கள் உயர்நிலையடைதற்பொருட்டுப் பரமேசுவரனாலும் அவனது அருளைப் பூரணமாகப்பெற்ற பெரியோர்களாலும் ஜீவபரவிலக்கணம், ஜகவிலக்கணம், வழிபடுமார்க்கம், ஞானநிலை, முத்திநிலையாகிய இவற்றினிலக்கணமென்னு மிவையமைந்த மதங்கள் அவரவர் பக்குவநோக்கிப் பலதிறத்தனவாக வெளியிடப்பட்டனவென்பது நன்மக்களது துணிபாம்.

இப்பல திறத்தவாய சமயங்களுள், சில மோக்ஷமடைதற்குப் பரம்பரா சாதனமும், சில நேர்சாதனமுமாம். அந்த நேர் சாதனமாயுள்ள மதங்களுள், சைவமென்பது பரமாநந்த நிலையை யடைவதற்கு அத்தியந்த நேர் சாதனமாம். சைவமதமென்பதன் பொருள், பேராநந்தத்தோடு சம்பந்தப்படு மார்க்கத்தை யறிவிக்குங் கருத்துடைய தென்பதாம். பேரானந்தவடிவ சிவத்தோடு ஜீவர்களைச் சம்பந்தப்படுத்துவது மெய்யுணர்வாற் பெறப்படும் மநோவிர்த்தி லயமன்றிப் பிறிதொன்றின்மையின், அம்மநோ விர்த்திலயத்தையடையுமாறு சைவமதத்தில் நான்கு சாதனங்கள் சொல்லப்படுகின்றன. அவை சரியை, கிரியை, யோகம், ஞானமென்பனவாம்.

1. சரியையாவது:—இயல்பாகவே நாமரூபமின்றிச் சச்சிதாநந்த வடிவமாய் விளங்கும் சிவம், பக்தஜனங்கள் உய்யும்பொருட்டு அவ்வப்போது கொண்ட திருமேனியின் குறிகள் (விக்கிரகங்கள்) அமைந்த ஆலயத்தைப் பெருக்கல், மெழுகல், அவ்வாலயத்துள்ள மூர்த்திகளணியுமாறு மலர்மாலை தொடுத்துத்தரல், அன்பர்களுடைய பாடல்களைப் பாடல், ஆடல் முதலியனவாம்.

2. கிரியையாவது:--அவ்வாலயத்தின்கணெழுந்தருளிய பெருமானை இதய தாமரையிற் பாவித்துத் தியானித்து வெளியிலப்பெருமானை அபிஷேக அலங்கார முதலியவற்றால் ஆராதிப்பதாம்.

3. யோகமாவது:—பிராணவாயுவினோட்டத்தை நாடி சுத்தி முதலியவற்றின் வாயிலாகத்தடுத்து, மூலாதார முதலிய ஆறுதாரங்களி லெழுந்தருளிய தேவதைகளைத் தரிசித்து உபரதியடைதலாம்

4. ஞானமாவது:—நானென்பது யார்? உலகமென்பது எத்தன்மையது? உலககாரணமெனப்படுஞ் சிவத்தின் சொரூபம் எத்தகையது? அதற்கும் எனக்கும் பிரிவிருப்பதன் காரணம் யாது? என்று அனுபவமுடைய தேசிகர் வாயிலாக விசாரித்து, நானும் சிவமும் சச்சிதானந்த வடிவமாயிருத்தலால் அபேதமாம். என்னிடத்துத் தேகாதி வடிவம் கற்பனை, சிவவடிவமாகிய யென்னையறியாமையினாலுண்டாயிற்று. இப்போதென்னை யறிந்ததினால், நீங்கிற்றெனத் திடம்பெறவுணர்தலாம்.

இந்நான்கு சாதனங்களுள், முன்னுள்ளது பின்னுள்ளதற்குச் சாதனமாம். இச்சாதனங்களால் சிவம் அடையப்படுதலின், இவையானந்தத்தை யடையவிரும்புமொவ்வொருவரும் அப்பியசிக்கத்தக்கனவாம்.

இம்மதத்துள், ஜீவேசுவர வேறுபாடு கற்பிதமாம்; உலகம் மித்தையாம். பசுபதிபாசங்களின் விசாரம ஞானத்திற்கு முக்கிய சாதனமாம்.

(1) பசுவாவது:—பாசத்தால் (மாயையால்) அநாதியாகவே கட்டுப்பட்டுத் தனதுண்மை நிலைபினையறியாது, யானெனதென்னுமபிமானத்தோடு, இருவினைகளால் வரும் சுகதுக்கங்களை யனுபவிக்கும் ஜீவனும்.

(2) பதியாவது:—பசுக்களது கர்மங்களுக்கேற்பத் தன்னிடத்திற் கற்பிதமாயுள்ள மகா மாயையென்னும்பாசத்தினின்றும், நாமரூபவடிவவுலகைப்படைத்து, அதன்கண் பசுக்களுக்குத் தனுகரண புவன போகங்களைக் கொடுத்து, அவற்றை நியமிக்கும் பரமேசுவரனும். இப்பதி தான்மாத்திரமாக நின்றபோது சிவமென்றும், பாசத்தோடுகூடி உலகைப்படைக்கும்போது ஈசுவரனென்றும் கூறப்படும். இவ்விசன் உலகத்தைப் படைத்துக் காத்தளிக்குங் காரணத்தால், அயன் அரி அரனெனச் சொல்லப்படுகின்றான். இவ்வீசுவரனது அவதாரங்கள் மச்சகூர்மாதிகளாம். இவ்வவதாரங்கள் உலகத்திற் புண்ணியங் குறைந்து பாபமதிகரிக்குங் காலத்து சாதுக்களைக்காத்தற் பொருட்டும், துஷ்டர்களை யழித்தற் பொருட்டும், அவ்வப்போது பரமேசுவரனாற் கொள்ளப்படுவனவாம். அய

னரி முதலியோர்க்கு, தேவி, ஆயுதம், வாகனமுதலியவை கூறப்படு தல் உபாசனையின் பொருட்டாமாதலின், அவை உண்மையன்றாம். சாதுக்களைக் காத்தல் அறக்கருணையும், துஷ்டர்களையழித்தல் மறக்க ருணையுமாம். இதனால் பரமேசுவரனது ஒவ்வொரு செயலும் ஜீவ ர்களின் நன்மையின் பொருட்டே யாமென்று செவ்விதின் விளங்கும்.

(3) பாசமாவது:—பதியைத்தவிர தனக்கோர் இருப்பில தாய், அசத்து ஜடதுக்க வடிவமாய், ஆணவமலம், மாயாமலமென்னு மிரண்டு சக்திகளையுடையதாய், உலகமாகிய காரியந்தோன்றுவத ற்கு முதற்காரணமாயிருக்கும் மாயையாம்.

இம்மூன்றனது சொரூபங்களையும் நன்றாக விசாரித்துத் தேகா காரமாகவும் உலகாகாரமாகவும் பரிணமிக்கும் அந்தக்கரண விர்த்தி யை யொழித்துச் சிவமே நானென்னும் அகண்டாகார விர்த்தியை யெழுப்புவதின் வாயிலாகச் சிவத்தைத் தனக்கபேதமாக வறிந்து, இனிப்பிறவா நிலையை ஜீவனடைதலே இம்மதத்தின் முக்கிய பய னும்.

இம்மதமித்தகைய மேம்பாட்டையுடையதா யிருப்பது பற்றி த்தான் "சைவசமயமேசமயம்" என்றும், "சைவஞ்சிவத்தொடு சம்பந்தமாதல்" என்றும் ஆன்றோர்களாற் கூறப்பட்டிருக்கின்றன.

சைவசமயத்திற் பலருமறியக்கூடிய சாதனமாயிருப்பவை, விபூதி உருத்திராட்சதாரணம், பஞ்சாக்ஷரஜபம், தேவார திருவாச கமுதலியவற்றின் பாராயண முதலியனவாம்.

சிவனது பிரசித்தமாகக் காணப்படும் வடிவங்கள் விநாயகர், சுப்பிரமணியர், நடராஜர் முதலிய மூர்த்தங்களாம்.

இம்மதத்தில் தத்துவம் 36:—இவற்றின் விரிவைக் கட்டளைக ளிற் காண்க.

குறிப்பு:—இது கந்தபுராணம் சூத சங்கிதையை யனுசரித்துச் சங்கிரகமாக வெழுதப்பட்டது.

தெ. கிருஷ்ணசாமி.

ஸ்ரீமான் கோ. வடிவேலுசெட்டியார் அவர்களின் மாணவர்க ளுள் ஒருவர்.

## பெற்ருேருடையவும் மக்களுடையவும் உத்தரவாதம்.

1. நம்தேசத்தில் பிராசின ஆசாரங்களும் தர்மங்களும் உயர் நலம் அமைந்தவைகளாயிருந்தன. அவ்வாசாரங்களுக்கு சிஷ்டா சாரமென்றுபெயர். சிஷ்டர்களாரென்ருல், உயர்ந்தோர், கல்வி யறிவில் சிறந்தவர், பொருமை செருக்கு அகங்காரமில்லாதார், அடக்கமுடையார், புறங்கூறல் கோபம் இல்லாதார், அகந்தை மமதை யற்றவர், சாந்தர், உலகவிஷய நுகர்ச்சிகளிற் பற்றில்லாதார்.

இவர்களின் ஒழுக்கமுறையே சிஷ்டாசார மென்பதாம். அவர்களைப்பார்த்து ஏனையர்ஒழுகவேண்டுவது. உலகத்தார் வழக்கமென்ருல், சிறுபான்மையான உயர்ந்தவர்களுடைய அனுஷ்டானமே யன்றி, பெரும்பான்மையானமூடர்களின் அனுஷ்டானமன்று. "உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே" என்பது தொல்காப்பியவசனம். ஒவ்வொருவிஷயத்திலும், ஒவ்வொரு ஹிந்துவும் தாம் ஒழுகவேண்டியமுறைகளை, விவரமாக முன்னவர்கள் உபதேசித்திருக்கிருர்கள். அனுஷ்டித்தும் வந்திருக்கிருர்கள். ஒவ்வொரு விதியும், இகத்தில் சுகத்தையும் ஞானத்தையும் கொடுக்கத்தக்கதாக ஏற்பட்டது.

2. ஒவ்வொருஹிந்துவும் ஓர் ஔரஸ புத்திரனையாவது ஸ்வீகாரப் புத்திரனையாவது அடைய வேண்டுமென்பதாக, ஸ்மிருதிகளின் அபிப்பிராயமென்று சாதாரண ஜனங்கள் நினைக்கின்ருர்கள். இதுமாத்திரம் போதாது. புத்திரனை நல்வழிப்படுத்தி சிஷ்டனைகச் செய்யவேண்டுமென்பதும் பிதாவகிக்கவேண்டிய முக்கியமான உத்தரவாதமாம். தானே ஆசாரியனுக இருந்து, கல்விகற்றுக்கொடுத்து நல்லவழியில் ஒழுகச்செய்து ஞானேபதேசம் செய்விக்கவேண்டும். புத்திரன் 16-வயதுவரை பிதாவின் சொல்மீருமல் "தந்தைசொன் மிக்கமந்திரமில்லை" யென்றபழமொழியை அனுஷ்டானத்தில் வைக்கவேண்டும். 16-வயதுக்குமேல், புத்திரனை பிதா சிநேகிதனைப் போல் பாராட்டவேண்டும். முன் அதிகாரமுறையாக சொன்னவார்த்தைகளை, இப்போது நயமாகவும் ஹிதமாகவும்சொல்லி, அவனை பிதா நடத்திவரவேண்டும். இவ்விதமாகத் தகுந்தவயதுவந்து, மகன் உலகத்தில் மனிதனுகப்பிரவேசித்து ஸ்வேச்சையாய் காரியங்கள்செய்யும் வரையில், அவன் தீயவழிகளில் புகாமலும், சிஷ்டாசாரத்திலிருந்து வழுவாமலும், பாதுகாத்துவரவேண்டுவது பிதாவின்கடனே.

3. இப்போது நம்முடைய தேசத்தில் மக்களைப்பெறுதலும், அவர்களுக்கு எப்படியாவது விவாகம் முடிப்பித்தலும், இவைதான் தம்முடைய கடமையென்று பெற்றோர் நினைக்கின்றார்கள். இது சரியானதன்று. "தந்தை மகற்கு ஆற்றுமுதவி அவையத்து முந்தியிருப்பச்செயல்" இது பெரியோர் வாக்கு. மகனுக்குக் கல்வி, நல்லொழுக்கம் முதலியவை கற்பித்துக்கொடுக்காதவரையில், தகப்பன் தன் உத்தரவாதத்தைக்கொண்டு செலுத்தினவனாகான். சிலர் தம்மகற்குப் பள்ளிக்கூடச் சம்பளம் முதலியன கொடுத்து வருதலுடனே, தம்முத்தரவாதம் நீங்கியதென்று நினைக்கிறார்கள். இதுவும் சரியன்று. இக்காலத்திய பள்ளிக்கூடத்தில் பயின்றுவருவதானது, ஆதிகாலத்தில் வழங்கிவந்த குருகுலவாஸமென்ற உயர்ந்த பழக்க முறையன்றாம். இக்காலத்தில் நம்முடைய பையன்களுக்கும் உபாத்தியாயர்களுக்கும் உள்ள சம்பந்தம் சொற்பகாலந்தான் நிகழ்வதாகும். நம்முடைய பையன்கள், அதிக நேரத்தை பள்ளிக்கூடத்திற்குப்புறம்பாகவே, கழிக்கின்றார்கள். அவரவர்களுடைய கிரகங்களில் செலவழிக்கின்ற காலம் அதிகமாகவிருக்கிறது. சாதாரணமாய் நம்மவர்களுடைய குடும்பத்தில், பையன்கள் சரியாயும் நேர்மையாயும் நடைபெறும்படியாய், அவர்கள் முன்னர் பிரத்தியக்ஷமான அனுஷ்டானங்கள்கிடையா. மக்கள்பொய்சொன்னாலும் தடுக்கிறவர்களில்லை. அதைக்கண்டுமெச்சுகிறவர்கள் பெரும்பான்மையர்.

4. முற்காலத்தில் கிரகங்கள் தோறும், ஔபாஸனங்கள் அக்கினிஹோத்திரங்கள், ஈசுவர ஆராதனைகள் முதலியவை நடத்தப்பெற்றன. இவை, குடும்பத்திலுள்ள சிறுவர்கள் சிறுமிகள் இவர்களுக்கு ஈசுவரனைப்பற்றிபொதுப்படையான ஒருவிதமானபக்தியின் பழக்கம் உண்டாவதற்கு அனுகூலமாயிருந்தன. ஈசுவர அவதார மகிமைகளைச்சொல்லியிருக்கின்ற புராணாதிகள் ராமாயணபாரதபாகவதங்கள், முற்காலத்து கிரகங்களிலும், மற்றும் இடங்களிலும், வாசிக்கப்பட்டன. அவற்றால், ஈசுவரர் எங்குமிருக்கிறாரென்ற பாவமும், புருஷ சிரேஷ்டர்கள், ஸ்திரீ சிரேஷ்டர்கள் இவர்கள் குணாதிசயங்களும், கேட்போர் மனங்களிற் பதிந்துவந்தன. இக்காலத்திலோ இவையெல்லாம் பொய்த்துப்போயின. கணபதி பூஜை, ஸரஸ்வதி பூஜை, கோகுலாஷ்டமி, ஸ்ரீராம நவமி இவைபோன்ற உத்

ஸவ விருதாதி காலங்கள், இக்காலத்திலும் கொண்டாடப்பெறுகின்றன. அதற்குரிய ஈசுவர மூர்த்திகளை ஆராதனை பண்ணுகிறார்கள். ஆனால் அவைகள் பேர்வியாராதனைகளாக விருக்கின்றன. அவைகளைப்பற்றிய உண்மைகள், பூர்வகாலத்தில் நடந்த விருத்தாந்தங்கள், இவற்றைத் தெரிந்துகொள்ளுகிறார்களில்லை. அதற்குரிய பக்ஷணாதிகளும் உண்டிகளும் மாத்திரம் முன்னரைவிட, அதிகமாக தினுசு தினுசாய் ஏற்பட்டிருக்கின்றன. இத்தகைய பூஜை முதலியவற்றால், நம்முடைய பையன்களுக்கு எத்தன்மையான ஈசுவர பக்தியும் சமயநெறி முறைகளும் உண்டாவதாகும்?

5 முன்னிருந்த எல்லா வழக்கங்களையும், ஒழுக்கங்களையும், இக்காலத்தில் திரும்பவும் அனுஷ்டானத்திற்குக்கொண்டுவர இயலாததுதான். ஆனால் அனுஷ்டானத்திலிருக்கின்ற, விருதாதிகள் உத்ஸவங்கள் நடத்தப்படும் காலங்களில், அவைகளின் சாதாரண விருத்தாந்தத்தையும், கூடுமானால் அவற்றின் தத்துவங்களையும், அந்தந்த கிரகஸ்தன் நேரிலாவது வேறு ஒரு வித்துவானைக்கொண்டாவது தன் குடும்பஸ்தர்களுக்குச் சொல்லவேண்டியது அத்யாவசியகமாம். இவ்வாறு செய்துவந்தால் ஈசுவரபக்தி, நல்லொழுக்கம் முதலானவை நம் பையன்களுக்கு ஏற்படும். பிராமண குலங்களில் அநேக கிரகஸ்தர்கள் சந்தியாவந்தனத்தை விட்டுவிட்டார்கள். அவர்களைப் பார்த்து அக்குடும்பங்களிலுள்ள ஏனையர்கள், அக்நியைப்பேயில்லாமல் ஒழித்தார்கள். ஆனால் உபநயனமென்ற சமஸ்காரத்தை, அதன் உண்மையை முற்றுமறியாமல் ஆடம்பரமாய் வெகு குதூஹலத்துடன் நடத்துகிறார்கள். விஸ்தாரமான சாப்பாடுகளுக்கும், பாட்டுக் கச்சேரிகளுக்கும், தாஸி சதிர்க்கச்சேரிகளுக்கும், வியாஜமாக இவ்வுபநயநத்தை நடத்திவருகிறார் போலும். உபநயநத்தின் உண்மையையும், சந்தியாவந்தநத்தின் உயர்ந்த ஞானபாகத்தையும், தெரிந்துகொள்ளுவார்களாகில் நம்மவர்கள் இவ்விதம் இருக்கமாட்டார்கள். அவைகளை அலக்ஷியம் செய்யார்கள்.

6. மேலும் இன்னுமொரு முக்கியமான விஷயம் பிதாக்கள் கவனிக்கவேண்டியது: அதாவது, புத்திரருக்குப் பால்யத்திலேயே விவாகம் செய்வதைத்தவிர்க்க வேண்டும். பால்ய விவாகத்தால்

உண்டாகும் கேட்டைப்பற்றி அதிகமாய் இவ்விடத்திற் சொல்ல வேண்டுவதில்லை. பால்யத்தில் விவாகம் செய்தால் இளம்பிராயத்தில் ருதுசாந்தி முகூர்த்தம் ஏற்படும்: ஸ்திரீபுமான்களின் சரீரங்கள் சரியானபடி வளர்ச்சியடைந்து விகாஸம் பெருமல், சம்போகம் ஏற்பட்டால், அதனல் உண்டாகும் குழந்தைகள் வீரியமில்லாதவைகளாயும் நல்ல மூளையில்லாதவைகளாகவும், ஏற்படும். அதனல் பலஹீனசந்ததி உண்டாம். தேசம் க்ஷேமக்குறைவுபடும். நம்தேசத்திலுள்ள ஜனங்களை முக்கியமாய் தென்னட்டு ஜனங்களையும், ஐரோப்பியர்களையும், தேகபலத்திலும் மனேபலத்திலும் புத்திநுட்பத்திலும் ஊக்கத்திலும் ஒப்பிட்டுப்பார்ப்போமாகில், நம் தேசத்தாருடைய ஸ்திதி மிகவும் வியஸனகரமாய்க் கீழானபடியிலிருக்கிறதைக் காண்போம். மேலும்,பையன்கள் கஷ்டமானஇக்காலத்துப்படிப்பை நன்ருய்ப்படிப்பதற்கு,தேகத்தினுடையபலமும்,மனத்தின்பலமும் விருத்தியடையவேண்டும். பிரமசாரி விருதத்தைப் பூராவாகக்கைக் கொள்ளவேண்டும். அப்படி நடந்தால்தான் மூளைபலப்படும், வளரும், நேர்மைப்படும். அப்படியின்றி படிக்குங்காலத்தில் அம்மாள் அகத்துக்கு வந்துவிட்டால், தேகம்தளரும், மூளைபலம்குறையும், படிப்பும் குன்றும். அதனல் கட்டாயமாக ஆதிநலமமைந்த பிரமசாரி விருதத்தைப் படிக்குங்காலத்தில் பூர்த்தியாய் அனுஷ்டிக்கும்படி செய்தல் பிதாவின் கடனும்.

இதுகாறும் பிதாவின்கடமையைச்சற்றுவிசாரித்தோம். இனிப் புத்திரர்களின் உத்தரவாதத்தைப்பற்றி ஆராய்வோம். "மகன் தந்தைக்காற்று முதவி, இவன் தந்தை எந்நோற்ருன்கொல்லெனுஞ்சொல்" எனுஞ் சொல்லுக்கு ஏற்ப, புத்திரன் நடக்கற்பாலது. அவ்விதம் பிறரால் மெச்சிக்கொள்ளத்தக்கபடி, கல்வியறிவு கேள்விகளால் நிறைந்தவனும், சீலமுள்ளவனுகவும், ஒழுகவேண்டும் "உலகசம்பத்தில், அறிவறிந்தமக்களைப் பெறுதலைத் தவிர வேறுசம்பத்தில்லை" யென்ருர் திருவள்ளுவர். பெற்ருேர்வணக்கம், பெரியோர்வணக்கம்,உபாத்தியாயர்வணக்கம்,இக்குணங்களுள்ளவராயும்,கல்விப்பயிற்சியில் தீவிரமுயற்சி யுள்ளவராயும், இருத்தல்வேண்டும். காலைமாலை மத்தியானம் என்ற காலங்களில் சந்தியாவந்தனமென்ற ஈசுவர ஆராதனையைத் தவருமல் நடத்தவேண்டும், தந்தைதாய் இவர்களின் சொற்களைக்

காப்பாற்றவேண்டும். இதைத்தான் 'தந்தைதாய்ப்பேண்' என்ருர் ஔவையார். "தந்தைசொன்மிக்க மந்திரமில்லை ,தாய்சொன்மிக்க வாசகமில்லை" என்பது 'தந்தைதாய்ப்பேண்' என்பதின் வியாக்கியானம். தீயர்கள்கூட்டத்தைத் தவிர்க்கவேண்டும். அவர் சம்பாஷணையை விலக்கவேண்டும். அவருடைய உறவை நீக்கவேண்டும். நல்லோரை நாடவேண்டும். ராஜபக்தியை விருத்திசெய்யவேண்டும். இவைகளெல்லாம் ஏட்டுச்சுரைக்காயாக நினையாமல், உண்மையாய் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டியவை யெனக்கருதி, அவ்விதம் ஒழுகுவார்களேயாகில், இக்காலத்தில்நம்தேசத்தில் உண்டாயிருக்கின்ற குழப்பங்களும் கொந்தளிப்புகளும் ஆற்றுப்போம். சாந்தமும் சமாதானமும் உண்டாம். தேசம் மேன்மைபெறும். இவ்விதம் நடைபெறும்படி இறைவன் அருள்வாராக!

ஓம் தத் ஸத்

ஆத்மநாதன்.

---

## நம் சரீரத்தில் உள்ள சக்கரங்கள்.

### —I—

பொதுவாய்நமக்கு ஸ்தூலசூக்ஷம காரணசரீரங்கள் இருக்கின்றன. சக்கரங்கள்,ஸ்தூலசரீரத்திலும் சூக்ஷமசரீரத்திலும்இருக்கின்றன. சக்கரங்கள் என்றபெயரினலேயே இவைகள் சுழற்சியுள்ளவைகளென்றுஏற்படும். இச்சக்கரங்கள்மனிதனின்ஒருசரீரத்தையும் அவனுடையமற்றைச்சரீரத்தையும் சம்பந்தப்படுத்தும் பொருத்துவாய்களாம். இவைகளின்வழியாக ஒருசரீரத்தினின்றுமற்றொருசரீரத்திற்கு சக்திஓட்டம்ஏற்படுகிறது.ஸ்தூலசரீரம் இருபான்மையது. கண்ணுக்குப்புலப்படும்ஸ்தூலசரீரம்ஒன்று; மற்றொன்று,முன்னதில் ஊடுருவியும், அதின்புறம்பாக ஓரங்குலம்வரையில் அதைச்சுற்றிக் கவசம்போல் பரவியும், நுண்ணிய ஆகாசதிரவியம் (ether) அமைந்தும், இருக்கிறது. இந்த பிந்தியகவசத்தின்மேற்பரப்பில், கிண்ணம் போன்று பள்ளமாய் ஏழுவட்டங்கள் இருக்கின்றன. ஆனால் அவைகளைக்குறிப்பிடுங்காலத்தில், ஸ்தூலசரீரத்தின் அங்கஅவயவங்களைச் சுட்டிக்காட்டி விவரிக்கப்படும். (1) மூலாதாரத்திலும், (2) நாபிக்கமலத்திலும், (3) மண்ணீரலிலும் (spleen) (4) ஹிருதயத்திலும்

(5) கண்டத்திலும், (6) புருவமத்தியிலும் (7) சிரசின்மத்தியிலுச்சியிலும் ஆக ஏழுஇடங்களில், ஏழுசக்கரங்கள் இருக்கின்றன. இவைகளைத் தவிர சரீரத்தில் வேறுசிலசக்கிரங்களும் உண்டு. ஆனால் ராஜயோகமுறையை அநுஷ்டிக்கிறவர்கள் அச்சக்கரங்களை உபயோகியார். இச்சக்கரங்கள் ஆசுரசம்பந்தப்பட்டகிருத்தியங்களுக்கு அநுகூலமானவைகளாகையால், சூந்யம் வைப்பார்கள் அவைகளைக் கிளப்பி ஆபிசாரப்பிரயோகங்கள் செய்வார்கள். இச்சக்கரங்களுடன் சம்பந்தப்படாதிருத்தலே நலம்.

2. மேற்சொன்ன ஏழுசக்கரங்கள் ஸப்தரஸ்மிகளுக்கும் ஸப்தஸ்வரங்களுக்கும் நேர் நேர் இசைந்து பொருத்தமுள்ளவைகளாக இருக்கின்றன; மேலும் ஒவ்வொருசக்கரத்திற்கும் சில அக்ஷரங்களை அமைத்தும் ஒவ்வொன்றுக்கும் சக்தியின்ஓரோர் பரிணமைத்தைக்குறிப்பிட்டும் நம்முடைய யோகசாஸ்திரங்களில் சொல்லப்படுகின்றன. இன்னசக்கரம் இத்தனை இதழ் உள்ளது என்றும் வர்ணிக்கப்பட்டிருக்கின்றது.

3. மேற்கண்டசக்கரங்கள் ஆகாசதிரவியம் அமைந்த வட்டங்கள். இவ்வட்டங்கள் வேகமாகச் சுழல்கின்றன. ஒவ்வொரு சக்கரமும் கிண்ணம்போல் இருக்கின்றது என்று முன்னமேயே பிரஸ்தாபித்திருக்கிறோம். அக்கிண்ணங்களுக்கு நேர்கோணமாக (at right angles) புவர்லோகசம்பந்தமான சூக்ஷ்மசரீரத்திலிருந்து சக்தி ஓட்டம் ஏற்படுகிறது. அச்சக்தி ஓட்டம் ஏழுகுணங்களை உடையது. அந்த எல்லாக் குணங்களும் மேற்கண்ட ஒவ்வொரு சக்கரத்திலும் அமைகின்றன. ஆனால் ஒவ்வொருசக்கரத்திலும் சக்தியின் ஓரோர் குணம் மாத்திரம் அதிகமாக வெளிப்படுகின்றது. மற்றையவை அந்தர்கதமாக இருக்கின்றன. அக்குணமானது அலைபோல் உயர்ந்தும் தாழ்ந்தும் அச்சக்கரங்களில் சுழலுகின்றது. இப்படிச் சுழல்கிறதினால் பார்வைக்கு இதழ்கள் அமைந்த புஷ்பத்தைப்போல தோன்றுகிறது. பிரகாசமான வர்ணங்களமைந்த அலைபோன்ற விளிம்புள்ள கண்ணாடிக்கிண்ணங்கள்போல், பார்வைக்கு அச்சக்கரங்கள் தோன்றும். இவைகளில் ஒவ்வொரு சக்கரத்திலும் பலவர்ணங்களிலிருந்தும் ஒருவர்ணம் மாத்திரம் மேலாய் அதிகமாகப்பிரகாசிக்கும்.

4. இச்சக்கரங்கள், சாதாரண மனிதன் சம்பந்தப்பட்ட மட்டில், அவன் சரீரம் உயிருடன் நிலைத்திருப்பதற்கு அனுகூலமாய், சக்திகள் ஓடும் வழியாகமாத்திரம் இருக்கின்றன. சாதாரண மனிதனிடத்தில் இச்சக்கரங்களின் வர்ணங்கள், மங்கலாய்க்காணப்படுகின்றன. விகாசம்பெற்றிருக்கின்றவர்களின் சரீரத்தில், மேற்படி சக்கரங்கள் எழுப்பப்பட்டு, கண்ணைப்பறித்துக்கொண்டுபோகும்படியான பிரகாசமுள்ளவைகளாகத்தோன்றுகின்றன. சாதாரணமாய் இரண்டங்குலம் குறுக்களவு உள்ள சக்கரங்கள், பின்பு ஒருபெரியகிண்ணத்தின் அளவாகவிரிந்து, ஒவ்வொருசக்கரமும் ஓரோர் சிறுசூரியனைப்போல, தளதளவென்று பிரகாசிக்கின்றது.

5. ஸ்தூலசரீரத்தின் ஒருபாகமாகியசூக்ஷ்ம ஆகாசகோசத்தின்கண்ணுள்ள (etheric double) சக்கரங்கள்:—(1) மூலாதாரத்திலிருக்கின்ற சக்கரத்தின் சக்திஅலை வெளிப்படுகிறதில், 4 உயர்ந்த பாகமும் 4 பள்ளமான பாகமும் காணப்படுகின்றன. அதனால் அச்சக்கரம் நாலு இதழ்கள் உடையது என்று, நம்முடைய யோக சாஸ்திரங்களிலும், சிலுவைபோலயிருக்கிறதென்றும், கிறிஸ்துவர்களுடைய புஸ்தகங்களிலும், விவரிக்கப்பட்டிருக்கின்றன. மேற்படி சக்கரம் பூர்ணமாக எழுப்பப்பட்டிருக்குங்காலத்தில், அது அக்நி போன்று மஞ்சள் கலந்த சிவப்புவர்ணமுள்ளதாயிருக்கின்றது. (2) *நாபிக்கமலத்திலிருக்கின்ற இரண்டாவதுசக்கரத்தின்விளிம்பு சலநிப்பதில், பத்து அலைகளுள்ளதாகவும், அதனால் பத்து இதழ்களுள்ள புஷ்பமாகவும் காணப்படுகிறது. இதன் வர்ணம் பலசாயையுள்ள சிவப்புவர்ணமாக இருக்கிறது. இச்சக்கரம் பலவாறுன காமனைகளுடன் சம்பந்தித்திருக்கிறது. (3) மண்ணீரலில் இருக்கின்ற 3-வது சக்கரம், அதன் சலநம் 6 அலைகளுள்ளதாகவிருக்கிறது. அதனால் 6 இதழ்உள்ள புஷ்பமாகச்சொல்லப்படுகிறது. இச்சக்கரத்தின் முக்கியமானதொழில், சூரியனிடத்தினின்று வருகின்ற சக்திகளைக் கிரகித்து பகிர்ந்துகொடுத்து, சரீரத்திற்கு உபயோக மாகும்படியாகச் செய்தலாம். இக்காரணம்பற்றி இச்சக்கரம் சூரியனைப்போல் ஜ்வ

---

* சுவாதிஷ்டானத்தில் இருக்கின்ற சக்கரம் இம்முறையில் விலக்கு. இதில் இரண்டாவது என்பது மணிபூரகம். இதில் மூன்ருவதாகச் சொல்லியிருக்கிற மண்ணீரல் சக்கிரம் வேறு.

விக்கின்றது. (4) ஹிருதயத்தில் இருக்கின்ற நாலாவதான சக்கரம் சுவர்ணம் போன்று பிரகாசிக்கின்றது. அது நான்காகப் பிறிகின்றது. அது ஒவ்வொருபாகமும் மும்மூன்றாக மறுபடியும் வகுக்கப் பட்டிருக்கின்றது. அதனால் இந்த சக்கரம் 12 அலைகள் அதாவது 12 இதழ்கள் உள்ள புஷ்பம்போல் காணப்படுகின்றது. (5) கண்டத்தில் உள்ள ஐந்தாவதான சக்கரம், பார்வைக்கு 16 இதழ் உள்ளதாகத்தோன்றும், வெள்ளிநிறமான பிரகாசமுடையது; சிற்றலைகளுள்ளநீரின்மேல், ஜ்வலிக்கின்றசந்திரபிரகாசம்போல், தோன்றும். (6) ஆறுவதான புருவமத்தியத்தின் சக்கரம் இரண்டு பிறிவினைகளுடையதாகத்தோன்றும். ஒன்று பெரும்பாலும் ரோஜாவர்ண முள்ளதாகவும், மற்றையது நீலம்கலந்த தூமவர்ணமுள்ளதாகவும், காணப்படுகிறது. இக்காரணம்பற்றிநம்முடைய யோகசாஸ்திரங்களில், இரண்டு இதழ்உள்ளபுஷ்பமாக இச்சக்கரத்தை வர்ணித்திருக்கிறது. மற்றைய சக்கரங்களில் தோன்றுகிற அலைகளை எண்ணியதுபோல் இச்சக்கரத்தில் இவ்விரண்டு இதழ்களில் சலநிக்கின்ற அலைகளைக்கணக்கிடில், ஒவ்வொன்று 48ஆக இரண்டு இதழ்களுக்கும் 96அலைகளைக் காணலாம். (7) ஏழாவதான சக்கரம் சிரசில் மேல்பாகத்தில் உச்சியில் உள்ளது. பூர்ணமாக இச்சக்கரம் விகசித்து வேலை செய்யும்கால், மற்றைய சக்கரங்கள் எல்லாவற்றையும்விட மஹாகம்பீரமான பிரகாசமுடையதாகவும், நானுவிதமான வர்ணங்கள் உள்ளதாகவும், மதிக்க முடியாதவிதமாக அவ்வளவு அதிகவேகமான சலநமுள்ளதாகவும் இருக்கும். நம்முடையசாஸ்திரங்களில் சகஸ்திரதளமுள்ள புஷ்பமாக இதுவர்ணிக்கபபெற்றுள்ளது. இவ்வர்ணனை யதார்த்தமானதே. இச்சக்கரவிளிம்பின் சலநஅலைகளை (undulations)கணக்கிட்டதில் 960 அலைகள் ஏற்பட்டன. ஏனைய சக்கரங்களுக்கு இல்லாத ஒரு காக்ஷி இச்சக்கரத்தில் இருக்கிறது. அதாவது இச்சக்கரத்தின் மத்தியில் ஜ்வலிக்கின்ற வெண்ணிறமான மற்றொரு சுழற்சிஇருக்கின்றது. அச்சுழற்சியின் சலநம் 12 அலைகள் அமைந்ததாகக்காணப்படும்.

[இன்னும் வரும]

ப. நா.

(C. W. L. in the Adayar Talks.)

# சூரியன், அதன் ஸ்தூல கவசங்கள் முதலியன.

## 1

விண்மண்டலத்தில் எண்ணிறந்த நக்ஷத்திரங்களில் சூரியன் நமக்குச் சமீபத்திலிருக்கின்ற ஒரு நக்ஷத்திரமாம். நம்மிடமிருந்து 8 நிமிஷம் தூரத்தில் சூரியன் இருக்கிறான். அதாவது 8 (நிமிஷம்) × 60 (விநாடி) × (ஒளியின்கதி) 186,000 மயில், இப்பெருக்கலால் ஏற்படும் தூரமாம். அதைச்சுற்றி (ராகு கேது என்ற சாயாகிருகங்கள் நீங்கலாக) புதன், சுக்கிரன், அங்காரகன், பூமி, குரு, சனி, யுரேனஸ், நெப்தூன் ஆக 8 கிரகங்களும், அவைகளில் பூமிக்கு 1 சந்திரனும், குருவுக்கு 4 சந்திரர்களும், சனிக்கு 6, யுரேனஸ், நெப்தூனுக்குத் தனித்தனி ஒன்றும், இச்சந்திரர்கள் அந்தந்தக் கிரகங்களைச் சுற்றிவர, இக்கிரகங்கள் சூரியனிடமிருந்து பலவித்தியாசமான தூரங்களில் இருந்துகொண்டு, பலவாறான வேகங்களுடனே ஓயாமல் ஒழியாமல் சூரியனைச் சுற்றிச்சுற்றி வருகின்றன. கிரஹமென்றால், ஜீவராசிகள் வசிக்கும் ஸ்தானம். இக்கிரஹங்களில் பலவாறான ஜீவராசிகள் வசிக்கின்றனவாகப் பொதுவாய் அறிஞர்களுடைய அபிப்பிராயம். இக்கிரஹங்களை இயங்கும்படியும், அவைகளின்கண் இருக்கின்ற ஜீவராசிகளை நடைபெறும்படியும், தன்னுடைய சக்திகளால் சூரியன் செய்கிறான். சூரியனுடைய பிரகாசம், உஷ்ணம், ரஸாயனசக்தி, பிராணன், முதலான சக்திகளால் பலவர்ணங்களுள்ள ஜீவராசிகளும், அவைகளின் வெவ்வேறான தொழில்களும், ஏற்படுகின்றன. காற்றென்ன, மேகமென்ன, மழையென்ன, இன்னும் உலகத்தில், (சமுத்திரத்தில் உண்டாகிற பெருக்கமும் (Tides) நீரோட்டமும் நீங்கலாக மற்ற) எல்லாவிதமான ஸ்தூலசூக்ஷம சலநங்களும், பிரகாசங்களும், மேற்சொல்லியபடி சூரியனுடைய ரஸ்மிகளின் காரியங்களாம்.

விஶ்வரூபம் ஹரிணம் ஜாதவேதஸம் பராயணம் ஜ்யோதிரேகம் தபந்தம் ஸஹஸ்ரரஶ்மிஶ்ஶததா வர்த்தமாந: ப்ராண: ப்ரஜாநாம் உதயத்யேஷ ஸூர்ய:—பிரச்நஉபநிஷத்.

இதன் பொருள்—சர்வரூபராயும், கிரணங்களையுடையவரும், ஞானமுடையவரும், சகலமான பிராணிகளுக்கும் ஆசரியமானவரும், ஒப்பற்றவரும், உலகத்துக்கெல்லாம் நேத்திரமானவரும்,

தாபம் செய்கிறவரும், அனேககிரணங்களையுடையவரும், அனேக விதமான பிராணிகளுக்கு பிராணனுமானவருமான, இந்த சூரியன் ஜீவராசிகளின் பொருட்டு உதயமாகுர்.

இதுபற்றியன்றோ சூரியனுக்குச் சாந்தோக்கியோபநிஷத்தில் உத்கீதஸ்வரம் (ஸ்வரம்—விஷ்ணு) என்று சொல்லப்பட்டதாகத் தோன்றுகிறது. காயத்திரியின் ஸ்தூலார்த்தமும் இதுவே யென்று மதிக்கலாம். உலகத்திற்கு மாதா பிதாவாக சூரியன் இருக்கிறார் எனச்சொல்லலாம். இச்சூரியன் ஒருபெரியஜ்வாலை ரூபமான அண்டம். கண்ணுக்குத் தோன்றும் பிம்பத்தின்குறுக்களவு சுமார் 860,000 மைல், அதைச்சுற்றியுள்ள ஆவிமண்டலத்தையும்சேர்த்து கணக்கிட்டால் 960,000 மைல் என்று எண்ணலாம். அதைப்பற்றிய கன அளவும் மற்றுமுள்ள விஷயங்களையும் ஜோதிஷ சாஸ்திரங்களில் கண்டுகொள்க.

சூரியன் முப்பான்மையானகவசங்களை உடைத்தாயிருக்கிறான். (1) வெளிக்கவசம் வர்ணக்கவசம் (Chromosphere) என்றுபெயர், இதுபெரும்பாலும்,ஹைட்ரோஜன் (Hydrogen)என்னும்நுண்ணிய ஆவியால் நிரம்பியிருக்கிறது. இதுஎரிகிற நிலையில் சிவப்புநிறமுடையது; இயந்திரங்களின் உதவியின்றி வெறும்கண்ணுக்கு இதுதோன்றுது. (2) இதனடுத்துஉள்ளே,இரும்பு,தாமிரம்,நாகம்,அலுமினியம், பிளாட்டினம்,சோடியம், பொடாசியம்முதலானஉலோகங்கள் ஆவிமயமாய் தங்கிய கவசம் உள்ளது. (3) அதற்கடுத்துஉள்ளேசுவர்ணமயமாய்த்தளதளவென்று ஜொலித்துக்கொண்டிருக்கின்றமகாப்பிரகாசமானதும் சூரியனுக்கு ஒரு சொரூபத்தைக் கொடுக்கின்றதுமான ஒருகவசம் உள்ளது. இக்கவசமே மகாமுக்கியமானது. இக்கவசத்தைத்தான், ஸ்தூலக்கண்ணினால், சாதாரணமாக,ஜனங்கள்பார்க்கின்றார்கள். முன்னவை இரண்டும் ஸ்தூலக் கண்களுக்குப் புலப்படா. முக்கோண ஸ்படிகங்களமைந்த தூரதிருஷ்டிக் கண்ணாடிகளால் (Telescope, fitted up with Spectroscope) ஊஹமாய்த்தெரிந்துகொள்ளலாம். முதலாவதான வர்ணக்கவசம் சிவப்புவர்ணமுள்ளது என்று சொல்லப்பட்டது. பூர்ண சூரிய கிரஹணகாலத்தில், மறைக்கின்றசந்திரவிளிம்பைச்சுற்றி,சிவப்புவர்ணமானவட்டத்தைப்பார்க்கலாம். அவ்வட்டம் வர்ணக்கவசத்தின் ஒருபாகமாம். மேற்கண்ட

மூன்றுகவசங்களுக்கும்உள்ளேகருத்தநீலவர்ணமானஅண்டம்ஒன்று உள்ளது. அது இன்னது என்றும் இத்தன்மையதென்றும், வானசாஸ்திரிகள் கண்டறிந்தாரில்லை. ஆனால் சிற்சிலகாலங்களில் முற்கூறிய மூன்றுகவசங்களிலும் இடைவெளிஏற்பட, அவ்வெளிகளின் மூலமாய்க்கருத்த நீலஅண்டத்தின் சிற்சிலபாகங்கள் தோன்றுகின்றன. அவைகளே தூமகேதுக்கள் (Sun Spots) என்றுசிலமேல்நாட்டுவானசாஸ்திரிகள்சொல்லுகின்றார்கள். மூன்றாவதான சுவர்ணகவசத்தைப் பற்றியும் அதன் உள்ளடங்கியிருக்கின்ற கருத்த நீலஅண்டத்தைப் பற்றியும் பொதுப்படையாகவேனும் நம்முன்னோர்களான மஹரிஷிகள் தெரிந்திருக்கின்றார்களென்பது அடியில்வரும் மந்திரத்தால் அறியவரும்.

“ 𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑍇𑌨 𑌪𑌾𑌤𑍍𑌰𑍇𑌣 𑌸𑌤𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌪𑌿𑌹𑌿𑌤𑌂 𑌮𑍁𑌖𑌮𑍍 ।
𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌪𑍂𑌷𑌨𑍍𑌨𑌪𑌾𑌵𑍃𑌣𑍁 𑌸𑌤𑍍𑌯𑌧𑌰𑍍𑌮𑌾𑌯 𑌦𑍃𑌷𑍍𑌟𑌯𑍇 ॥ 𑌈𑌶𑌾𑌵𑌾𑌸𑍍𑌯𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍.

இதன் வெளிப்படையான பொருள்—ஓ சூரியனே சுவர்ணமயமான கவசத்தால் உம்முடைய யதார்த்தமான உள்ளண்டம் மூடப்பட்டிருக்கின்றது. நல்வழியில்நடைபெறும்வண்ணமும்நான்உண்மையை அறியும்பொருட்டும் அந்தமறைவான கவசத்தை விலக்கிவிடும். கருத்த உள்அண்டத்தைச்சூரியன்என்றும்,பிரகாசிக்கின்றதை ஒரு கோசம்என்றும், ரிஷிகளின் தாத்பரியமாகத்தோன்றுகிறது. இஃது இக்காலத்திய மேல்நாட்டு அறிஞர்களின் கருத்துக்குப்பொருத்தமாக இருக்கிறது. இயந்திரங்களின் சாதனங்களாலோ, அல்லது திவ்விய திருஷ்டியாலோ, நம்முன்னோர்களான ரிஷிகள் சூரியனின் உண்மையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்பது திண்ணம்.

அடியில்வரும் உபநிஷத் மந்திரம் சூரியனிடம் அந்தர்யாமியாக இருக்கும் புருஷனும், நம்முடையஹிருதயத்திலிருக்கின்ற புருஷனும், ஒருவனே, வேறன்று, என்பதாகஉபதேசிக்கின்றது. காயத்திரி மஹாமந்திரத்தின் சித்தாந்தமும் இதுவே.

𑌪𑍂𑌷𑌨𑍍𑌨𑍇𑌕𑌰𑍍𑌷𑍇 𑌯𑌮 𑌸𑍂𑌰𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯 𑌵𑍍𑌯𑍂𑌹 𑌰𑌶𑍍𑌮𑍀𑌨𑍍
𑌸𑌮𑍂𑌹 𑌤𑍇𑌜𑍋 𑌯𑌤𑍍𑌤𑍇 𑌰𑍂𑌪𑌂 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌤𑌮𑌂 𑌤𑌤𑍍𑌤𑍇 𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌯𑍋
𑌽𑌸𑌾𑌵𑌸𑍌 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌸𑍋𑌽𑌹𑌮𑌸𑍍𑌮𑌿 ॥ 𑌈𑌶𑌾𑌵𑌾𑌸𑍍𑌯𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍.

இதன் பொருள்—ஒருரிஷி சூரியனைப்போற்றுகிறார். ஜகத்தை போஷிக்கிறவரே! ஒருவராக சஞ்சரிக்கிறவரே! எல்லாவற்றையும் நியமனம்செய்கிறவரே! கிரணங்கள், பிராணங்கள், இரஸங்கள், இவைகளை ஸ்வீகரிக்கிறவரே! பிரஜாபதி புத்திரரே! கிரணங்களை விலக்கிவையும், தாபத்தைக்கொடுக்கும் ஜோதியைஒன்ருகச்சேரும், உம்முடைய மிகவும் சுந்தரமான ஸ்வரூபத்தை, உம்முடைய அநுக்கிரகத்தால், பார்க்கிறேன். இந்த சூரியமண்டலத்தில் இருக்கிற புருஷனே நான், நானே அப்புருஷனுகவிருக்கிறேன்.

சூரியனுக்கு ஹம்ஸ: என்று ரிக்வேதத்தில் ஒரு பெயர் உண்டு. அதாவது "ஹம்ஸஸோஹம்" உச்வாஸம் நிச்வாஸம் என்ற சுவாஸம் விடும் தன்மை உள்ளவன் என்பது பொருள். சில மேல் நாட்டு வானசாஸ்திரிகள் சூரியன் மனிதனின் ஹிருதயத்தைப்போல 10 அல்லது 11 வருஷங்களுக்கு ஒருமுறை விரிகிறதும் குறுகிறதுமாக இருக்கிருன் என்று, இப்போது தெரிந்திருக்கிருர்கள். இவ்விதமே ஆருணமந்திரத்தையும் சூரியசகஸ்தரநாமத்தையும் ஆதித்திய ஹிருதயத்தையும் ஆராய்ச்சி செய்தோமானுல் சூரியனைப் பற்றி அனேக அற்புதமான விஷயங்களைஅறிவோம்.

(இன்னும் வரும்)

ட. நா.

## புத்தக வரவு.

---

**ஆங்கில அரசியல்**—இது லௌகீகர்களுக்கு உபயோகமான ஒருசிறு புத்தகம். மதுரை முனிசிபல் யாதவபள்ளிக்கூடம் உபாத்தியாயர் M. V. ரெங்ஸ்வாமி அய்யர் இயற்றியது. சிவில், கிரிமினல், ரிவினியூ ரிஜிஸ்ட்ரேஷன், பாரஸ்டு முதலானவைகளைப்பற்றிய விஷயங்களைச் சுருக்கமாய் யாவரும் தெரிந்துகொள்ளும்படியாக எளிய தமிழ்நடையில் ஏற்பட்டுள்ளது. இதன்விலை 0—8—0 இது ஒருவருஷத்திற்குள்ளாக, இரண்டாம் பதிப்பு ஏற்பட்டிருக்கிறதினுல் இப்புத்தகம் மிகவும்உபயோகமாகஉள்ளது என்பது நன்கு விளங்கும்.

**ஸ்ரீ இராமாயண வினு விடை**.— இக்காலத்திற்கேற்ப, லோகபிரஸித்தமான இராமாயணம், வினு விடை ரூபமாகத் தமிழில் வந்திருக்

கின்றமை மிகவும் மெச்சத்தக்கது. முதலில் மகா-ா-ா-ஸ்ரீ திருநெல் வேலி அ. கிருஷ்ணசாமி அவர்கள் இயற்றியது சிறு புத்தகம். அதுவே இப்போது சொற்பகாலத்திற்குள், மூன்றும் பதிப்பாக ஏற்பட்டிருக்கின்றமை, இப்புத்தகம் நம்மவர்களால் மிகவும் ஆதரிக்கப்படுகின்றது என்பதைக் காட்டுகின்றது. இப்புத்தகம் எளிய தமிழ் நடையில் அழகாய் எழுதியுள்ளது. நேர்த்தியாக அச்சிடப்பட்டிருக்கிறது, நம் தேசத்தில் இராமாயணத்தைப்போல நீதிமுறைகளையும், தர்ம முறைகளையும் உபதேசிக்கிற வேறு புத்தகம் இல்லை. யாவரும் வாசித்து இலகுவாய் அறியும்படி அவ்வுயர்நலம் அமைந்த புண்ணியசரிதம் வினுவிடைரூபமாக நம்மவர்களுக்கு ஏற்பட்டது ஒருபெரும்பாக்கியமே. இவ்வினுவிடையை இப்போதுஇயற்றிய பிரஹ்மஸ்ரீ ஆ. வி. கஸ்தூரிரங்கஅய்யர்அவர்களுக்குத் தமிழ்நாட்டார் மிகவும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். நீதிமுறைகற்பித்தலுக்கு இந்தவினுவிடைமிகவும் உரித்தானசாதனமாகும்.

முதற்படியான (Primary) வித்தியாசாலைகளிலும், இன்றியமையாத நீதிமுறைநூலாக, இப்புத்தகத்தை ஏற்படுத்தல் வேண்டும். ஒவ்வொரு ஹிந்துவும், இப்புத்தகத்தைத் தம்முடைய கிருகத்தில், ஆண்பெண் குழந்தைகள் யாவரும் படிக்கும்படி செய்யவேண்டும். அனுபந்தத்தில் இராமாயணத்திலிருந்து வெளியாகும் நீதிகள், அத்யாத்ம ராமாயணத்திற்காணப்படும் உட்பொருள்கள், ஆநந்த இராமாயணத்திற் காணப்படும் உட்பொருள்கள். சுருக்கமாயும் தெளிவாயும், எழுதிச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவை, கதையைத்தவிர, ஞானவிஷயங்களைநோக்கும்சித்தவிர்த்தியுள்ளவர்களுக்கு மிகவும் பயன்படும். பிரஹ்மஞான சபையைச்சார்ந்தஒவ்வொருஅங்கத்தினரும் இவ்வருமையான புத்தகத்தைத் தாம்படிப்பதுமன்றி அன்னியர்களும் படிக்கும்படியாகப் பரவச்செய்யவேண்டும். அப்படிச்செய்தலே ஒருபுண்ணியமாம். இப்புத்தகம் இன்னும் மேன்மேலும் அதிகமாகப் பரவவேண்டுமென்பதே நம் பிரார்த்தனை. இதன் விலை 1 ரூ தான்.

**கிணிகாஞானி சம்வாதம்:—** இது ஒரு பொதுமகட்கும் ஞானிக்கும் நடந்த ஸம்பாஷணை முறையில் உள்ள ஒரு வேதாந்தக்கதை. இது நாகபட்டணம் மிஷன் ஹைஸ்கூல் ஸம்ஸ்கிருத பண்டிதர் பிரஹ்மஸ்ரீ S. A. சக்ரபாணி அய்யரால் இயற்றப்பட்டது. இது எளிய தமிழில் நன்றாய் அமைந்துள்ளது. இது அத்துவைதவேதாந்த தர்சநத்தை நன்றாய் விளக்குகிறது. அத்தர்சநத்தில் அபிமானமுள்ளவர்களுக்கு மிகப்பயன்படும். விலைஅணு 2.

பத்திராதிபர்.

# சமாசாரம்.

இராஜாங்கங்களுக்குள் சண்டைகளைத்தொலைக்க ஏற்பட்டசபை:— ஐக்கமாகாணத்தின் (U. S. A.) ஜனப்பிரதிநிதிகளின்சபையார், அவர்களுடைய சபாநாயகரானகனம்தங்கிய் டாப்டுஎன்பார் நிறைவேற்றும்படி அடியில்வருமாறு ஒருஅநுமதிருபமான தீர்மானம்செய்துள்ளார். சபாநாயகர், புத்திமான்களாகவும்செல்வாக்குள்ளவர்களாகவுமுள்ள 5அமெரிக்கர்களைக்கொண்டு ஒரு சிறு சபை ஏற்படுத்தவேண்டுவது. அச்சபையார் உலகத்திலுள்ள அரசர்களையும் ராஜாங்கங்களையும், சந்தித்து, உலகமுழுமையும் சண்டை சச்சரவின்றி சமாதானம் நடைபெறவேண்டுவதற்குரியஉபாயங்களையும் சாதனங்களையும் தேடற்பாலது. ஸ்ரீமாந். நுஸ்வால்டு என்பார் இச்சபையின் அக்கிராஸநம் வகிப்பார்போல தோன்றுகிறது. இச்சபையார் நன் முயற்சி செய்வார்களாகில், உலகத்திற்கு க்ஷேமமும் சமாதானமும் பிறக்கும். இப்போது உலகம் என்பது மேல்நாட்டாருடையஸ்வாதீனத்தில்இருக்கின்றது. அவர்களில்முக்கியமானவர்களாவார்: நுஷியர், ஆங்கிலர், ஜர்மானியர், பிரான்சுக்காரர், ஐக்கியமாகாணத்தாராகிய அமெரிக்கர் என்பவர்களாம். இவர்கள் ஒருவரை மற்றொருவர் நம்பாமல், அவர்களுடைய நிலஜலராணுவங்களை மேன்மேலும் விர்த்திபண்ணிக்கொண்டு வருகிறார்கள். நச்சுமரமான உலக விஷயப்பொருள்களை நாடி மயக்கம்கொண்டு, நாம் முந்தவேண்டும் என்ற போட்டியினால், அறிவை வெளியே பறக்கவிட்டு இச்சாதியார்கள் வீணான சண்டைகளை உண்டுபண்ணிக்கொள்ளுகிறார்கள். இப்போது, மனத்துக்குள் பகைத்தன்மையும், வெளியில் போலிச்சமாதானப் பேச்சும் இவர்களுக்குள் நிகழ்கின்றது. பொதுஜன நன்மையைக் கருதுவாராகில் கொடிய போரைத்தவிர்ப்பர். இதை உத்தேசித்து, சிலவருஷங்களுக்கு முன்னர், ஹேக்கு என்னும் பட்டணத்தில், உலகத்தில் போரைத்தவிர்த்து சமாதானம் பயக்கும் சபை ஒன்று ஏற்பட்டு, பலவிதமாய் முயற்சிசெய்துகொண்டு வருகிறது. இனி அமெரிக்காவில் ஏற்படும் நூதன சபையும், இவ்வித நல்ல கைங்கரியத்தைக்கருதி முயலுகின்றமையால், இனிமேல், உலகத்தில் ராஜாங்கங்களுக்குள் போர் குன்றி, பொறுமையும், சமாதானமும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கக்கூடும். உலகத்தில் சமாதானம் ஏற்பட்டால் தான், உலகம் ஞானவழியில் மேன்மைபெற்று உய்யும் பொருட்டு, ஞானிகளும் மஹாத்துமாக்களும் அவதாரம் செய்வார்கள். நற்காலம் விடியும்.

சேவைசாதன்:—இப்பெயருள்ளசபைஒன்று பம்பாய்பட்டணத்தில், சென்ற 1908ஹு ஆகஸ்டுமீ௳த்தில், ஏற்பட்டிருக்கிறது. அச்சபையைஸ்தாபித்தவர்கள் கல்விபயிற்சியுள்ள அறிவுள்ள பெண்பாலர்களாம். அவர்களில் ஹிந்து, பார்ஸி, மகம்மதிய ஸ்திரீகள் இருக்கின்றார்கள். பிறர் நலம் பயக்கும் கைங்கரியத்திற்கே அருமையான மனிதவாழ்க்கையைப் பெற்றோ

மென்வும், சமய வேற்றுமைகள் பலவாறாக இருப்பினும் உண்மையில், யாவரும் ஒரே தன்மையர்எனவும், எங்கும் பரவியிருக்கின்ற ஆன்மா ஒன்றே எனவும், கருதினவர்களாய், ஜனசமூகத்தில் நன்மையை உண்டாக்கும் கைங்கரியங்களைச் செய்ய அநுகூலமாக இச்சபையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இச்சபையை நடத்துகிறார்கள் முக்கியமாக பெண்பாலர்களே! புருஷர்களும் உதவிபுரிகிறார்கள். இவர்கள் வெண்தாமரை 'புஷ்பத்தை தங்கள் கருத்தைக்குறிப்பிடும் அறிகுறியாக ஏற்படுத்தியிருக்கின்றார்கள். ஸ்திரீகளின் ஹிருதயம் வெண்தாமரைப்புஷ்பம்போல மாசற்றது. உலகத்தில் நேரிடும் துக்கங்களையும் துயரங்களையும் கண்டவுடனே இரங்கி உதவிபுரியும் தன்மையுடையது. சொற்பகாலத்திற்குள் இச்சபையானது பொதுஜனங்களால் நன்கு மதிக்கப்பெற்று, ஆதரிக்கப்படுகின்றது, என்பது சென்ற 1909ஷு த்திய ரிப்போர்ட்டினால் தெரியவருகிறது. சென்ற1909 ஷு ஜூன்மீ வரை மொத்தவருவாய் 92,126ரூ. செலவு 25,368ரூ. ஸ்திரமானபொதுமுதல், சுமார் 66,658ரூ. இச்சபை மேன்மேலும் அபிவிர்த்திக்கு வரக்கூடியபடி, ஊக்கமும், விடாமுயற்சி, நன்நம்பிக்கையும் உள்ளவர்களாக இச்சபையை நடத்துகிற ஸ்திரீ ரத்நங்கள் இருக்கின்றமையைத்தெரிந்துகொண்டோம்; மிக்க சந்தோஷமடைந்தோம். இத்தன்மையான ஒரு சங்கம் நம்முடைய சென்னைராஜதானியிலும் இருத்தற்பாலதன்றோ? எல்லாம் வல்ல ஈசன அப்படி உண்டாகும்படி அருள்புரிவாராக.

**ஸ்ரீ வேங்கட்டரமண வைத்தியசாலையும் ஆயுர்வேத பாடசாலையும்:**

மைலாப்பூரில், இப்போது ஹைக்கோர்டு ஜட்ஜாக இருக்கிற கனம் தங்கிய வி. கிருஷ்ணஸாமி அய்யர் அவர்கள், தம்முடைய பிதா அவர்களின் ஞாபகச்சின்னமாக இவ்வைத்திய சாலையையும், பாடசாலையையும் சில வருஷங்களுக்கு முன்னர் ஸ்தாபித்திருக்கிறார்கள். இத்தர்மங்கள் மிகவும் உபயோகமானவைகள். சென்ற 1909-ஷு த்திய ரிபோர்ட்டினால், 27,801 பெயர்களானவியாதியஸ்தர்கள், இவ்வைத்தியசாலையில் வைத்தியம்பண்ணிக்கொண்டார்கள். மருந்துகள் பெற்றார்கள். இவர்களில் 26,246 பெயர்களுக்கு மருந்து இனமாகக் கொடுக்கப்பட்டது. தினம் 76 பெயர்கள் இச்சாலையில் வைத்திய உதவிபெறுகிறார்கள். இவ்வைத்தியசாலைக்கும், பாடசாலைக்கும், மூலதிரவியம் ரூ 30,000 தான் இருக்கின்றது. இதற்கு பதின்மடங்கு திரவியம் இருந்தால்தான் இத்தர்மங்கள் சாசுவதமாக நடைபெறும். இவ்வைத்தியசாலையைச் சேர்ந்த பாடசாலையில் 8 பெயர்கள் படித்தார்கள். அவர்களில் நால்வர் கடைசிப்பரீக்ஷை செய்யப்பெற்றார்கள். மூவர் யோக்கியதாபத்திரம் பெற்றிருக்கிறார்கள். அம்மூவர்களில் இருவர் இவ்வைத்திய சாலையிலேயே வேலையில் அமர்ந்திருக்கிறார்கள். மற்றொருவர், வைத்தியத்தொழிலை திருவல்லிக்கேணியில், நடத்திவருகிறார்.

இவ்வித்தியாசாலையில் இவ்வருஷம் நால்வர் மாணுக்கராகச் சேர்ந்திருக்கிருர்கள். வடமொழியில் உள்ள ஆயுர்வேத சாஸ்திரங்கள் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. நம்தேசத்தினருக்கு, இவ்வைத்தியமுறையே மிகவும் பொருத்தமானது. இம்முறையை சரியானபடி சர்க்காரில் ஆதரித்து நடைபெறும்படியாகச்செய்வார்களேயாகில், இன்னும் அதிக மேன்மையையடைந்து, ஜனங்களுக்கு அதிகமாகப் பயன்படும். இம்முறை வைத்தியம் செய்துகொள்ளுதல், அதிகச் செலவுக்கு இடமில்லாமலிருக்கிறது. ஆங்கிலவைத்தியமோ அதிகச்செலவுள்ளது. அது நம் தேசத்தவர்களுக்கு அவ்வளவு அனுகூலமாக இல்லை. நம்மவர்கள் ஏழைகளாக இருக்கின்றமையால், நம்தேசத்து வைத்தியத்தை விருத்தி செய்துகொள்ளுவோமாகில், அது நமக்கு நலம்தரும். இப்போது, சரியானபடி யாதொரு வைத்தியமுறைப் படிப்பும் பயிற்சியுமின்றி, கடையில் இலகுவாய் அகப்படும், சில தமிழ் வாகடங்களை அரைகுறையாய்க்கற்று, வைத்தியர் என்று பெயர் வைத்துக்கொண்டு, வைத்தியம் செய்கிறதாகப் பெயர்பண்ணுகிருர்கள். ஷெ வெங்கட்டரமண வைத்திய பாடசாலையைப்போன்ற பாடசாலைகள் பல இடங்களில் ஏற்படும் பக்ஷத்தில், அநேகர் வாசித்துப் பயிற்சியடைந்து உபகாரமுள்ள வைத்தியர்களாக உண்டாவார்கள். வருஷம் ஒருமுறை இத்தகைய வித்யார்த்திகளை சர்க்கார், தக்கவர்களைக்கொண்டு பரீக்ஷைசெய்து, அதில்தேறுகிறவர்களுக்கு, ஒருயோக்கியதா பத்திரம் கொடுத்து, அபிமானிப்பாராகில், சொற்பகாலத்துக்குள் தக்க வைத்தியர்கள் ஏற்படுவார்கள். அதன்பிறகு, இப்பரீக்ஷையில் தேறுகிறவர்கள் தான் வைத்தியத் தொழில் நடத்தலாம். மற்றவர்கள் நடத்தக்கூடாது என்று ஒரு நிபந்தனையையும் ஏற்படுத்தலாம். அப்படி சர்க்கார் செய்யும் பக்ஷத்தில், நம்தேசத்தார் அதிக நன்றிபாராட்டுவார்கள். ஆங்கில வைத்தியத்திற்குச்செலவழிக்கிறதுடன், இந்திய ஆயுர்வேதவைத்தியத்தை அபிமானித்து, அபிவிருத்திக்கு ஏற்ற உபாயங்களையும், முயற்சிகளையும் நம்தேசத்து ராஜாங்கத்தார் எப்போது நாடி நடத்துவார்களோ நாமறியோம். அக்காலத்தை எதிர்பாராமல், நம்மவர்களில் தனவான்கள், கும்பாபிஷேகத்திற்கென்றும், உத்ஸவங்களுக்கென்றும், இன்னும் பலவித காரியங்களுக்கும் செலவழிக்கும் திரவியத்தில், சொற்ப பாகத்தையேனும், இத்தன்மையான, வைத்திய பாடசாலைகளை ஏற்படுத்தி நடத்துவதில் செலவழிப்பார்களேயாகில், அது புத்திசாலித்தனமாகவும், வெகு பிரயோஜனகரமாகவு மிருக்கும். **பிறர் பிணிதீர்த்தல் அபமேனத்ததும்.**

## சென்னை சம்ஸ்கிருத உயர்தரப்பாடசாலை.

ஹைக்கோர்ட்டு ஜட்ஜாகஇருக்கின்ற கனம்தங்கிய வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்களால் இப்பாடசாலை ஏற்படுத்தப்பட்டு சில வருஷங்க

ளாக நடத்தப்பட்டுவருகின்றது. இப்பாடசாலையில் **சம்ஸ்கிருத சாஸ்திரங்களின்** படிப்புடன், ஆங்கிலபாஷையின் படிப்பும் நடந்து வருகின்றது. (1) வேதபாஷ்யம், (2) வேதாந்தம், (3) சாங்கியம், (4) யோகம் முதலிய தர்சநங்களைக்கற்பிக்கவேண்டுமென்ற கருத்துடன் இப்பாடசாலை ஏற்படுத்தப்பட்டதாகத்தெரியவருகிறது. பிரகிருதத்தில், வேதபாஷ்யமும் (1), வேதாந்தத்தில் அத்வைதபாகமும் (2), கற்பிக்கப்படுகின்றன. மற்றதர்சநங்களைக் கற்பிக்கும் வகுப்புக்கள் இனி ஏற்படவேண்டும். வேதாந்த வகுப்பின் அத்வைதபாகத்தை விருத்திசெய்ய வேண்டுமென்று, காலஞ்சென்ற முன்சீபு **ஸ்வாமிநாத சாஸ்திரிகளின்** டிரஸ்டிகளால் இந்த பாடசாலைக்கு நன்கொடை கொடுக்கப்பட்டிருக்கிறது. அவ்விதம் ஒவ்வொரு **தர்சநத்து**க்கும் ஓர் ஓர் வகுப்பு ஏற்படுத்தி, அந்தந்ததர்சநத்தைப்படிப்பிக்கவேண்டும். முக்கியமாக சாங்கியம், நியாயம், ஜோதிஷம், சில்பம் முதலியவைகளைக் கற்பிக்கவேண்டிய சாதநங்கள் உண்டாக்கப்பெறவேண்டும். **சர்க்கார்** இப்பாடசாலைக்கு வருஷத்துக்குரூ 1000 கொடுத்து உதவிபுரிகின்றார்கள். கட்டிடம் கட்டுவதற்குச்சகாயம் செய்கிறதாகவும், வாக்களித்திருக்கிறார்கள், இப்பாடசாலையின், மூலதிரவியம்ரூ 69,000 இருக்கிறதாகத்தெரியவருகிறது. உத்தேசங்களான எல்லா சாஸ்திரங்களும், தர்சநங்களும் கற்பிக்கப்படவேண்டுமானால், இத்திரவியம்போல, இன்னும் நாலு ஐந்துபங்கு திரவியம் சேரவேண்டும். நம் தேசத்தில் உள்ள தர்மசிரத்தை உள்ளவர்கள் மனங்கொண்டால், இது ஒருபெரிய காரியமில்லை. பலவாறிகளாக நம்மவர்கள் செலவழிக்கிறார்கள். கொஞ்சம் அறிவுடனே, செலவழிப்பார்களேயாகில், நலம் உண்டாகும். தர்மங்கள், காலதேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப, நடைபெறவேண்டும். இக்காலத்தில், நம்தேசத்திற்கு இருக்கிற குறை எல்லாம் கல்விகேள்விகளின் குறைதான். நம்தேசத்தில் 30கோடி ஜனங்கள் இருக்கின்றார்கள். அதில் 20கோடி ஜனங்கள் அ, உ, ம் தெரியாதவர்களாம். யாதொரு கல்விவாசனையே இல்லாதார். நம்தேசத்தின் படிப்பு அபிவிருத்தியானால் தான், நமக்கு நல்லகாலம் விடியும். மதுரை ஜில்லாவில் உள்ள நாட்டுக்கோட்டைச்செட்டிபிள்ளைகள், வேதசாஸ்திர பாடசாலைகளை ஏற்படுத்தி நடத்திவருகிறார்கள். ஏராளமான திரவியங்கள் இவைகளின் நிமித்தம் செலவழிக்கின்றார்கள். அவைகளை கொஞ்சம் அறிவுடனே இக்காலத்திற்குப் பயன்படும்படி, நடத்துவார்களாகில் இகத்திலும் பரத்திலும் பலன் அடைவார்கள்.

ஒருமதச்சபை:—அடுத்த டிஸம்பர் அல்லது ஜனவரி மாதத்தில் **அலகபாத்தில்** இங்நாட்டிலுள்ள பல மதாபிமானிகளின் சபை ஒன்று கூடும். அச்சபையைக்கூட்ட ஓர் உபசரணைக்கமிட்டி நியமிக்கப் பட்டுவருகின்றது.

# பூர்ணசந்திரோதயம்.

**ஓர் அபூர்வசிலாசாஸனம் :**—ஐக்கிய மாகாணத்தைச் சார்ந்த மதுராபுரியில் **பண்டித ராதாகிருஷ்ண** என்பவர் சமீபத்தில் ஒரு சிலா சாஸனத்தை அவ்வூருக்கடுத்த **சர்ப்பூர்** என்ற கிராமத்தில் கண்டெடுத்தனர். இவ்வூருக்கும் மதுரைக்கும் நடுவில் யமுனையாறு ஓடுகின்றதைத்தவிர வேறு அதிக தூரமில்லை. அந்தச்சாஸனம் ஒரு கல் ஸ்தம்பத்தில் வெட்டப்பட்டிருக்கின்றது. கல் வெட்டு முழுதும் சமஸ்கிருத பாஷையிலிருக்கின்றது. **அசோகச்** சக்கரவர்த்தி காலத்து சாஸனங்கள் கூடபிராகிருத பாஷையில்தான் இருந்து வருகின்றன. அக்கற்சிலையைப் பாரத்துவாஜ கோத்திரத்தைச் சேர்ந்த **துரோணலா** என்ற பிராமணர் ஒருவர் தாம் 12 நாள் செய்த ஒரு யாகத்துக்கு யூபஸ்தம்பமாய் உதவும்படி நட்டனரென்று அச்சாஸனத்தால் தெரியவருகிறது. இச்சாஸனம் சரித்திரவிசேஷமுள்ளது. அசோகச் சக்கரவர்த்திக்குப்பின் பௌத்தமத பரிபாலகராயிருந்தவர் **ஹுவிஷ்கா** என்று இதுவரை நம்பப்பட்டிருந்தது. இச்சாஸனத்தால் அவர்களிருவருக்கும் இடையே **வசிஷ்கா** என்ற ஒரு சக்கரவர்த்தியிருந்ததாகத் தெரியவருகின்றதே இதன் முக்கிய விசேஷம்.

**சமஸ்கிருத ஏட்டுப்பிரதிகள் :**—**லீகாக்** என்ற கல்விமான் மத்திய ஆசியாவில் சில சம்ஸ்கிருத கையெழுத்துப் பிரதிகள் கண்டுபிடித்தனர். அதைப்பார்த்து **பர்லின்** சர்வகலாசாலை பண்டிதர் **லியூடர்ஸ்** என்பவர் அதற்கு அர்த்தம் சொன்னதைப் பாஷாபிமானிகள் அறிந்திருப்பார்கள். இவ்விஷயத்தைப்பற்றிக் கல்கத்தாவில் மகா பண்டிதராகிய **ஹரிப்பிரஸாத்** சாஸ்திரி அவர்களிடம் ஒரு ஐரோப்பியர் பேசிக்கொண்டிருந்தனராம். அவ்வாங்கிலேயர் அப்பொழுது இந்தியாவில் நாகரீகம் தோற்றிய நாள் முதற்கொண்டே சம்ஸ்கிருதபாஷையில் நாடகங்கள் எழுதப்பட்டு வந்திருக்கின்றனவென்றும், சம்ஸ்கிருத நாடக லக்ஷணங்களைப்பற்றிச் சொல்லும் நூல் கி. மு. இரண்டாம் நூற்றாண்டு முதற்கொண்டே எழுதப்பட்டிருக்கவேண்டுமென்றும், சம்ஸ்கிருத நாடகங்கள் பிராசீனமுள்ளவைகளென்பதற்கு **மகா அலெக்ஸாண்டர்** காலத்தில் வசித்த **சாந்தீய்யர்** என்ற ஆசிரியர் எழுதியிருக்கும் அர்த்த சாஸ்திரத்தில் அத்தாட்சிகள் இருக்கின்றனவென்றும், மத்திய ஆசியாவிலுள்ள ஒரு குகையிலிருந்து பிரிட்டிஷ் காட்சிசாலைக்கு **டாக்டர் ஸ்டீன்** கொண்டுபோன சாஸனங்களுக்கு அர்த்தம் செய்யப்படுங்கால், சம்ஸ்கிருத நாடகங்களின் பிராசீன நிலைமையைப்பற்றி அதிக விவரங்கள் வெளியாகக் கூடுமென்றும், கோபிபாலைவனத்தின் கீழ் பல பழையகால நாகரீகச் சின்னங்கள் இன்னும் மறைந்து கிடக்கக்கூடுமென்று நம்புகிறதாகவும் கூறினாராம். ஐரோப்பியர் பாஷா விஷயமாய்ச் சிரமப்பட்டுவந்தால் நம் பாஷைக்குப் பேரும் புகழுமுண்டாகும் என்பதற்கையமில்லை.

காசி மத்திய ஹிந்து கல்விச்சாலையில் (C. H. College) போதகாசிரியர்களாக 18 பேர் இருந்துவருகிறார்கள். அவர்களில் 15 பேர் இந்தியர்கள். 3 பேர் ஐரோப்பியர்கள்.

பத்திராதிபர்.